செந்தமிழ் 1922-23

வால்யூம் 13 [illegible]

3L
R65'M211,N11\D
M23·13·5
186724

ரெஜிஸ்தர் எம். 916.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
வேதாந்த விசாரம் செய்யும்
ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.,
பத்திராதிபர்.

ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சி.

JUN 1923

ஸபையின் 1922—1923௵ ரிப்பரவரி௴.

ஸம்புடம் 13.] துந்துபி௵ மாசி௴ [ஸஞ்சிகை 5.

1. பத்ராதிபரின் குறிப்புகள் 157
2. பகவத்கீதைக்கு ஓர் புதிய உரை.
நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர். ... 159
3. கடிதங்கள்.
டி. ராமசாமி அய்யங்கார். ... 168
4. ஹிந்து மதஸ்தாபாக மசோதா.
பத்ராதிபர். ... 170
5. பௌத்தமதமும் ஜைநமதமும் (ஓர் ஸங்க்ரஹம்).
பி. லக்ஷ்மீநரஸு ... 172
6. ஸ்ரீரஹஸ்த்ரய ஸாரார்த்த ஸங்கிரஹம். ... 173
7. வித்வதுபந்யாஸங்கள்.
வேலூர் கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார் ... 178
8. எண்ணாயிரம் கிராமத்தின் ஓர் சிலாசாஸநம் ... 187
9. ஸ்ரீவிசிஷ்டாத்வைத தத்வம். ... 9

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால்
ப்ரகாசம் செய்யப்பட்டது.

மதராஸ்: கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

வருஷச்சந்தா ரூ. 3—0—0] [ஸஞ்சிகை 1 அணா.

தேசவ்ருத்தாந்தங்கள்.

ஸ்ரீ மு ஷ் ண ம்.

தென் ஆர்க்காடு ஜில்லாவில் ஸ்வயம்பூஸ்தலம் என்று பிரஸித்திபெற்ற ஸ்ரீமுஷ்ணமென்ற திவ்யக்ஷேத்ரத்தில் சென்ற நவம்பர்மீ 19வ அன்று ஸ்ரீஆண்டாள் ஸந்நிதியின் கர்ப்பக்ருஹத்திலிருந்து மூல விக்ரமானது பிடுங்கப்பட்டு வெளியில் அர்த்தமண்டபத்தில் போடப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. இந்த ஸங்கதி கோவிலதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் கோவில் தர்மகர்த்தாவான ஸ்ரீமான் உடயார் பாளயம் ஜமீன்தார் தன்மானேஜரை அனுப்பி விசாரிக்கும் பொருட்டு அனுப்பினாராம். அவரும் வந்து விசாரணை செய்ததில் ஒன்றும் புலப்படவில்லையாம். பிற்பாடு மூல விக்ரஹத்தை யதாஸ்தானம் கொண்டுபோய்வைத்துவிட்டார்களாம். இதற்கு இன்னும் ஸம்ப்ரோக்ஷணம் செய்யவில்லையாம். இந்த பெரிய தேவஸ்தானத்தில் இம்மாதிரி அக்ரமம் நடந்தால் இதுகலத்தின் வைபரீத்யம். வைதிக ச்ரத்தையுள்ள ஜமீன்தார் இனி மேலாவது இப்படி நடக்காமல் தகுந்த ஏற்பாட்டை செய்வதுமில்லாமல், ஸம்ப்ரோக்ஷணை முதலியது செய்து ஆராதநத்துக்கு யோக்யமாக செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீரங்கம் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபை.

ஷை ஸபையின் 7-வது வார்ஷக்கூட்டமும் கோயில் வேதாந்த த்வயவர்த்திநீ பாடசாலையின் பரிசளிப்புக்கூட்டமும் ஸ்ரீ உடையவர் ஸந்நிதியில் சென்ற டிசம்பர்மீ 31வ ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஆர். சடகோபய்யங்காரின் அக்ராஸநத்தின் கீழ்நடந்தது.பல வைஷ்ணவ ப்ராம்மணரும் ப்ராம்மண ரல்லாதாரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கார்யதர்சி வர்ஷாந்த அறிக்கையைப்படித்தார். கார்யதர்சி ஸ்ரீமான் கஸ்தூரி ரங்காசார்யர் 'த்ராவிட வேதாந்த வைபவம்' என்ற விஷயமாக ஒரு உபந்யாஸம் செய்தார். பாடசாலைப் பண்டிதர் வித்வான் தேசி வரதாசார்யர் ஸ்வாமி இதை ஆதரித்து ஒரு உபந்யாஸம் செய்தார். ஒரு மாணவருக்கு ஸ்ரீபாகவதத்தின் தசமஸ்கந்தத்தின் இருபாகங்களும் மற்ற மாணவர்களுக்குக் கதர் சால்வைகளும் கொடுக்கப்பட்டன. வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.—ஸுசேதமித்திரன்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
வேதாந்த தீபிகை.
பத்ராதிபர்:—டாக்டர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.
கார்யதர்சி:—ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், [illegible]

ஸம்புடம் 13·] துந்துபி வருஷம் மாசிமீ [ஸஞ்சிகை 5·

9 JUN

"த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் தயாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥"
[ஸ்ரீ பாகவதம் 1-9-33·]

பத்ராதிபரின் குறிப்புகள்.

கீழ்த்திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜன் ஸந்நிதியில் மூலபிம்பத்திற் சிறிது பங்கம் உண்டாயிருக்கிறதென்றும், பெருமாள் இப்போது பாலாலயத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்றும், மூலபேரத்தைச் சிலாவிக்ரஹமாக எழுந்தருளப்பண்ணி மஹாஸம்ப்ரோக்ஷணாதிகளைச்செய்விக்க ஸ்ரீமஹந்து உத்தேசித்திருக்கிறார் என்றும், அதன் விஷயமாக அவர் அந்த ஸ்தலத்திலும் மற்ற விடங்களிலு முள்ள வைதிகர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டிருக்கிறார் என்றும் நமக்கு ஸமாசாரம் எட்டுகிறது. இதுவரையில் மூலவிக்ரஹம் ஸுதையிலிருந்து வருகின்றது. இந்தப் பெரிய திருமேனியின் கர்ப்பத்தில் சிறிய சிலாவிக்ரஹம் ஒன்றிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

இந்த விஷயத்தில் உள்ளூரில் சில அபிப்ராய பேதங்களிருப்பதாயும் தெரியவருகிறது. இப்போது உண்டாயிருக்கும் பங்கம் அதிகமில்லையென்றும், அதற்காகத் திருமேனியைப் புதுப்பிக்க வேண்டாமென்றும், வெகுகாலத்துக்குமுன் முதல்கர்பத்தி லடங்கியிருக்கும் சிறிய சிலாவிக்ரஹத்தை அப்புரப்படுத்திப் புதுபிம்பம் வைப்பது ஸரியல்லவென்றும், இப்போதிருக்கும் திருமேனியையே சிறிது திருத்திவிட்டாற் போதுமானதென்றும் ஒரு கக்ஷியார் சொல்லுகிறார்களாம். பெருமாள் திருமேனிக்குப் பங்கம் ஏற்பட்டு பாலாலயத்தில் எழுந்தருளின பிற்பாடு மஹாஸம்ப்ரோக்ஷணம் செய்தே தீரவேண்டியிருப்பதாலும், ஒருவிதபங்க முண்டானதினால் இனி அடிக்கடி அப்படி நேரிடக்கூடுமாகையால் சாச்வதமான சிலாமூர்த்தியை எழுந்தருளப் பண்ணிவிடுவதே உசிதமென்றும், அதினால் உண்டாகும் சிலவைப் பெரியதாக நினைக்கக்கூடாதென்றும் மற்றோர் சாரார் அபிப்ராயம். இவ்வண்ணமே திருக்குடந்தைக்கடுத்த ஒப்பிலியப்பன் ஸந்நிதியில், சிறிது வர்ஷங்களுக்குமுன், ஜீர்ண

16724

மாயிருந்த ஸுதா பிம்பத்துக்குப் பதிலாக ஸாளக்ராம சிலாமூர்த்தியை எழுந்தருளப்பண்ணி மஹாஸம்ப்ரோக்ஷணம் நடந்த விஷயம் ப்ரஸித்தம். அக்கைங்கர்யத்தில் ப்ரமுகராயிருந்த ராவ்பஹதூர் ஸ்ரீமான் என் கிருஷ்ணஸாமி அய்யங்கார், த்ரிமதஸ்தர்களிலும் ப்ரமுகர்களான அம்மாஸத்ரம் ஸ்ரீ. உப. வே. சேஷாசார்யர் ஸ்வாமி, திருவிசை நல்லூர் ப்ரும்ம ஸ்ரீ ராமஸுப்டா சாஸ்த்ரிகள், முதலியவர்கள் தீர்க்க பர்யாலோசனையின் பேரில் கொடுத்த அபிப்ராயங்களை ஆதாரமாகக்கொண்டு புதுமூர்த்தியைத் திருப்ரதிஷ்டை செய்வித்தார் என்பதும் ப்ரஸித்தம். 'ஸ்ரேயாம்ஸி பஹு விக்நாநி' (நல்ல காரியங்களுக்கு இடையூறுகள் பல) என்கிற கணக்கில், இம்மாதிரியான கார்யங்களுக்குப் பல ஆக்ஷேபனைகளும் தடங்கல்களும் உண்டாவது ஸஹஜம். ஒப்பிலியப்பன் திருப்ரதிஷ்டையிலும் அவை நேர்ந்தன. திருப்பதியிலும் கக்ஷிகள் உண்டாயிருக்கின்றன. இது விஷயமான தகவல்கள் முழுவதும் இன்னும் கிடைக்கவில்லையாகையால், இதைப்பற்றிய பராமர்சத்தை இங்கு நிறுத்திக்கொள்ளுகிறோம்.

*   *   *   *   *   *

துன்மதி வரு மார்கழிமீ த்தில் திருக்குடந்தையில் நமது ஸபையின் வார்ஷிக மஹாஸங்கத்தை நடத்திவைத்த ஸத்காரஸபையார் சிலதினங்களுக்குமுன், ஷை ஸபையின் அத்யக்ஷராகிய ராவ்பஹதூர் ஸ்ரீமான் என். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் தலைமையின் கீழ் கூடிக் கணக்குகளை முடிவுகட்டி, மிகுந்த ரூ. 178-ஐ, ஆரம்ப மூலதனமாக வைத்துக்கொண்டு, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைத் தொடர்ச்சியாக ப்ரவசனம் செய்ய ஸ்திரமாக திட்டமொன்றை ஏற்படுத்தவேண்டுமென்றும், அதை அந்த அக்ராஸனுதிபதியே தயாரிக்கும்படிக்கும் தீர்மானித்தார்கள் என்பதைக் கேட்க மிகவும் ஸந்தோஷிக்கிறோம். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரவசனமானது ஸரியாகச் செய்யப்பட்டால் ஜநங்களுக்குள் ஆஸ்திக்யமும் ஒற்றுமையும் வளருமென்பதில் ஸந்தேஹமேயில்லை. இதை ஒவ்வொரு ஊரிலிருக்கும் தேசாபிமானிகளும் ப்ரமுகர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள் தமது ப்ரதானமான கைங்கர்யமாகக் கைக்கொள்ளவேண்டும். பரஸ்பரவிரோதங்களும், மதவிஷயத்தில் ஔதாஸீந்யமும், விஷயத்தை யறியாமையினுலுண்டாகின்றன. நமது ஸபையின் அநுபவத்தில், வித்வதுபந்யாஸங்களின் மூலமாக ஸம்ப்ரதாய ப்ரவசநங்கள் நடந்த விடங்களிலெல்லாம் மிகுந்த உத்ஸாஹமும், மத உணர்ச்சியும், ப்ராம்மணர்க்கும் மற்றவர்க்கும் ஸௌஹார்த்தமும், பெருகியது வெளிப்பட்டது. நமது ஸித்தாந்த ப்ரவர்த்தனத்துக்கு ஆரம்ப ஸ்தலமாகிய திருக்குடந்தையிலேயே நவீன நாகரீகம் மிகவும் முற்றிவிட்டது! ஆகையால் அங்குதான் இந்த ப்ரசாரம் தீவ்ரமாய் நடக்கவேண்டும். அவ்வூர் வாஸிகளுடைய இந்த அபிஸந்தியானது, தீர்மானத்தோடு மட்டும் நிற்காமல் வெகு சீக்கிரத்தில் நடவடிக்கையில் ப்ரதிபலிக்கும்படி ஸ்ரீமான் என். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து நிறைவேற்ற ஆவலுடன் எதிர்ப்பார்க்கின்றோம்.

॥ ஸ்ரீ: ॥

பகவத்கீதைக்கு ஓர் புதிய உரை.

(முன் தொடர்ச்சி.)

ஈச்வரனுடைய ப்ரயோஜந அபேக்ஷை

ஸ்வயமே பரிபூர்ணனுன ஈச்வரன் அபேக்ஷிக்கும் ப்ரயோஜநமொன்றுமில்லை; உலகங்களைப்படைப்பது காப்பது முதலியவை, ஸார்வபௌமர்களான ராஜாக்கள் கூனர் குறளர் முதலியவர்களைப் போஷித்தும், கிளி முதலியவைகளை வளர்த்தும், ப்ரதிமைகளை யலங்கரித்தும், செய்வதெல்லாம் ஒருவித ப்ரதிப்ரயோஜநத்தையும் எதிர்பாராத வெறும் ஸந்தோஷகரங்களான கார்யங்களாகிறுப்போல் ஸர்வேச்வரனுக்குக் கேவல லீலாகார்யங்கள், என்பது வேதாந்த மதம். முக்த ஜீவர்கள் ஈச்வரனைப்போல் ஆநந்தம் முதலிய அநுபவங்களைப் பெறுகிறுர்களேயாகிலும், உலக ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களில் இவர்களுக்கு ஸம்பந்தமில்லை, அவை ஈச்வரனுக்கே உரித்தானவை, என்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. கீதையிலும் 'ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந' (ஹே! பார்த்த மூன்றுலோகங்களிலும் எனக்குச்செய்தாக வேண்டுவதொன்றுமில்லை), 'ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா॥' (என்னிடத்தில் கர்மங்கள் ஒட்டுகிறதில்லை; எனக்குக் கர்மபலத்தில் இச்சையில்லை) என்று பலபடிகளில் சரண்யனும் அருளிச்செய்தான். ஈச்வரனுடைய லீலை அவனுடைய கம்பீரமான அநந்தகல்யாணகுணங்களோடு கூடின மனதை அநுஸரித்திருக்கும்; சேதனர்களுடைய புண்யபாபங்களுக்கீடாக நடக்கும். ஆதலால் மற்றவர்களுடைய லீலையிற்போல், ஈச்வர லீலையில் பக்ஷபாதமாவது (வைஷம்யம்) தயையின்மை (நைர்க்ருண்யம்) யாவது கிடையாது என்றும் வேதாந்தம் உணர்த்துகின்றது.

ஆகையால் 'லோகத்தார் கார்யம் தான் யோகியினுடையவும் கார்யம்; அதுதான் ஈச்வரனுடையவும் கார்யம்' என்பதற்கு அர்த்தமேயில்லை. ஒரு ப்ரயோஜநத்தை அபேக்ஷித்து உழைக்கிறுனென்றுல், ஈச்வரன் பரிபூர்ணனுக மாட்டான். பௌத்தர் ஜைநர் முதலிய நிரீச்வரவாதிகள், ஒவ்வொரு ஜீவனும் பூர்ணதையை (perfection) அடைய ப்ரவ்ருத்திகளைச் செய்கிறுர்கள் என்றும், அந்தத் தசையை யடைந்தவன் தான் ஈச்வரனென்றும் சொல்வார்கள். அம்மதங்களில் ஸர்வஜ்ஞனுய் ஸர்வசக்தியாய் ஸர்வத்துக்கும் காரணமாக இருக்கும் ஈச்வரனுக்கு இடமில்லை. கிறிஸ்துமதம் பரவிய ஐரோப்பாவில்

இந்த நினைவு ஸாதாரணம். ‘பௌத்தமதமும் ஹிந்துமதமும்’ என்னும் புத்தகத்தில் ஸர் சார்ல்ஸ் எலியட் (Sir Charles Elliott) என்பவர் ‘ஐரோப்பியத் தத்வவாதிகள், ப்ரும்மமானது பூர்ணமாகவேண்டிய ஒரு பெரிய ப்ரயோஜநத்தை உத்தேசித்தே தனது வ்யாபாரங்களைச்செய்கிறதென்று நிர்மானித்து, அஃதென்ன வென்பதைத் தெளிய அபேக்ஷிக்கிறார்கள். பரமாத்மா எப்போதும் பூர்ணனாகவே இருந்தானென்றாவது, இப்போதும் பூர்ணனாய் இருக்கிறானென்றாவது, இனி வருங்காலமெல்லாம் அப்படியிருப்பானென்றாவது சொல்லவொண்ணாது. அவனும் அவனையறிகின்ற ஜீவர்களும் ஒன்று ‘என்று சொல்லிவிட்டு,’ உலக வ்யாபாரங்களாகிற நாடகத்தினால் அவன் பாதிக்கப்படுகிறதில்லை என்னக்கூடுமோ?’ European thought demands and fancies the motive of Brahman the idea that he is working for some consummation not that He was or is and will eternally be complete uneffected by the drama of the universe and yet be identical with souls that know Him) என்று வரைந்திருக்கிறார். நமது உரையாசிரியரும் இத்தகைய மனோபாவத்துடனேதான் எழுதியிருக்கிறார் என்பது பரிஷ்காரமாய் ஏற்படுகின்றது. இந்த ஐரோப்பியரின் உக்திகளில் ஒன்றைமட்டும் நாமும் ஏற்கலாம். அதாவது, ஜீவனும் ஈச்வரனும் ஒன்றேயானால் ஜீவர்களுடைய ஸுகதுக்கங்கள் ஈச்வரனையும் பீடிக்கத்தான் வேண்டும்! அப்போது ஜீவர்களைப் போல் ஈச்வரனும் தன் மோக்ஷமார்க்கத்தைத் தேடவேண்டியவனாகிறான்; அப்படிப்பட்ட ‘ஈச்வரன்’ மற்றவரை ரக்ஷிப்பதெப்படி?-என்று. ஈச்வரனை இப்படியாக்குவதைவிட இல்லை என்பதே நலம்.

கீதையும் வைதிக மதமும்.

கீதையில் ஸ்ரீக்ருஷ்ணன் ‘வைதிகமதத்தை நவீனமாக வமைத்து ஸகல ஜனங்களுக்கும் உதவும்படி செய்தார்’ (Sri Krishna modernised the Vedic teaching and made it applicable to all humanity) என்றார். நமது நண்பர். இதன் கருத்தென்ன? வைதிகமதத்தில் ‘அந்தணர் அந்தியர் எல்லையினின்ற அனைத்துலகும்’ உய்யவழியில்லையோ? அம்மார்க்கத்தை யெடுத்து விளக்கியதல்லவோ ஸ்ரீவைஷ்ணவ மதத்தினுடையவும் ஸ்ரீ உடையவருடையவும் பெருமை! உபநிஷத்துக்களைக் கொடுத்த பகவான் வேறு, கீதையைப் பேசினவர் வேறு என்கிறாரோ? இல்லையானால் ஸமயத்துக்குத் தக்கபடி பேசுகிறவனையா பரதேவதை யென்பது? இன்னொரு காலத்தில் கீதையையும் மாற்றிப் படித்து விடுவானோ?

‘வேதங்களின் ப்ராசீன வ்யாக்யானம் கீதையின் தெளிவான உபதேசத்துக்கு, விரோதமாகக் காணப்பட்டால் முதற்கூறியது போகவேண்டும்’ (Whenever the orthodox interpretation of the Vedas, conflict with the clear teaching of the Gita the former should give way) என்றதினால்

உபநிஷத்து, ஸூத்ரம், கீதை, ஆகிய மூன்று ‘ப்ரஸ்தானங்களும்’ ஒரே மதத்தைச் சொல்லுகிறது, என்கிற தத்வத்தை அஸ்திவாரமாகக் கொண்ட வைதிக வ்யாக்யாதாக்க ளெல்லாரும் (மூன்று மதஸ்தர்களும்) இவருடைய தூஷணத்துக்கும் பாத்ரர்களாக வேண்டும். ‘உபநிஷத்துக்களின் ப்ராசீன அர்த்தங்களை யனுஸரித்து அர்த்தம்பண்ணுவதற்காகக் கீதை வசனங்களைத் திருத்தி விட்டார்கள்’ என்று ஸ்ரீபாஷ்யகாரரையும் ஸ்ரீ தேசிகனையும் மட்டும் குறிப்பிட்டு இவர் நிந்திக்க ந்யாயமில்லை. வேதமதம் வேறு, உபநிஷத் மதம் வேறு, கீதையின் ஸமாசாரம் வேறு, என்று கிறிஸ்தவ ஐரோப்பியர் முதலியவர்கள் எழுதியவைகளை ப்ரமாணங்களாகக் கொண்டு அர்த்தம் செய்யப்புகுந்தால், கீதையின் மூலவசநங்களை முறுக்கி ஒடிக்க வேண்டிய அவச்யம் நேரிடுமே ஒழியப், ‘பூர்வர்கள்கண்டக சோதனம் பண்ணி நடந்த வழியிலே நடக்கையாலே நமக்கு வருவதொரு தப்பில்லை’ என்பது நிச்சயம்.

‘வேதவாதரதா: பார்த்த நாந்யதஸ்தீதி வாதிந:’ (வேதவாதத்திலே உழலுகிறவர்கள், அவற்றிற் சொல்லப்பட்ட கர்ம பலங்களைத்தவிர வேறொன்றுமில்லை யென்பவர்கள்); ‘த்ரைகுண்ய விஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந’ (த்ரிகுண ஸம்பந்தமான விஷயங்களையும் வேதம் சொல்லும்; அவற்றைவிட்டு வெளியேறு, அர்ஜுநா!); என்றதெல்லாம் வேதநிந்தை யல்லவென்றும், வேதத்தின் ப்ரும்ம பாகத்தின் பெருமையையறியாது, ஸ்வர்க்கம் முதலிய அழியத்தக்க பலங்களுக்கு ஸாதனமாகமட்டும் வைதிக கர்மங்களை யநுஷ்டிப்பவர்களைப் பற்றினவையென்றும எல்லா வைதிக வ்யாக்தாக்களும் அபிப்ராயப்பட்டார்கள். இந்த ச்லோகங்களினால் நமது நண்பருக்கு ஒரு ஸாதகமும் ஏற்படாது.

ஈச்வர ஜீவ ஸ்வரூபாதி தத்வநிருபணங்களில் உபநிஷத்துக்கும் கீதைக்கும் பரஸ்பரம் விரோதமிருக்கிறதென்கிறாரோ? எங்கும், முதலில் நித்யாத்ம ஸ்வரூபம், பிறகு கர்ம ஜ்ஞாநமார்க்கங்களினாலே ஆத்ம ஸாக்ஷாத்காரம், அதன்மேல் பகவதுபாஸநத்தால் பகவத் ப்ராப்தி என்கிற வரிசைதான் காணப்படுகிறது. இந்த அம்சங்களை இவர் ஆக்ஷேபிப்பதாகப் புலப்படவில்லை.

கீதை வர்ணாச்ரமதர்மங்களை யொழித்து விட்டதென்று இவர் நேராகச்சொல்லாவிட்டாலும், அந்த ப்ராந்திமட்டும் இவர்க்கிருப்பது ஆங்காங்கு வெளியாகிறது. ‘இங்கு (முக்தி) மார்க்கத்தின் எந்த ப்ரதேசத்திலும் (வைதிக) கர்மங்கள் வேண்டுமென்று சொல்லப்படவில்லை. (No ceremonies are insisted as necessary in any part of the path) என்று சொல்லி உடனே ‘இங்கு சொல்லப்படும் (வைதிக) கர்மங்களெனப்படுமவை அவனவன் தன்தன் நிலைமைக்குத் தக்கப்படி செய்யவேண்டுமவைதான்’ whenever

ceremonies are referred to, they are such duties as one has to perform in his state of life) என்றும் சொன்னர்! ‘தன்தன் நிலைமைக்குத் தக்கபடி செய்ய வேண்டிய கார்யம்’ என்பது வர்ணாச்ரம தர்ம மல்லவோ? சுருங்கச்சொல்லில் ‘எனக்கு வர்ணாச்ரம தர்மமென்பதில் நம்பிக்கையில்லை’ என்று ஒருவர் சொல்வது ருஜுவான முன்னை க்ஷனத அதை ஒழித்துவிட்டது என்றால் அது ருஜுவாகாது. அர்ஜுனன் வேதத்திலும் வர்ணாச்ரம தர்மத்திலும் நம்பிக்கையுடையவன்; அவற்றையே தவறாமல் அநுஷ்டித்தவன்; யுத்த ஆரம்பத்தில் பந்து ஸ்நேஹத்தால் கலங்கிட போதும், தர்ம சாஸ்த்ரங்களை மறக்கவில்லை; வர்ணக்கலப்பு; ஸ்த்ரீகளின் சீரழிவு, பிண்டதர்ப்பணங்களில்லாமல் பித்ருக்களின் வீழ்ச்சி, குலநாசத்தினால் வரும் நரகவாஸம் முதலிய விபத்துக்களுக்குத் தப்பவேண்டுமே என்று பயந்தான்; இப்படிக்கலங்கினவனைத்தேற்றி அவனை வர்ண தர்மமான யுத்தத்தைச்செய்யப்பண்ணவே கீதை உபதேசிக்கப்பட்டது: ஸ்ரீகீதாசார்யனும் ‘ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:’ (தன் வர்ணாச்ரம உசிதமான கர்மங்களினாலேயே பகவானை ஆராதித்து மனிதன் ஸித்தியை அடைகிறான்); ‘அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ:’ (ஜ்யோதிஷ்டோமங்களாகிய க்ரதுக்களும், பஞ்சமஹா யஜ்ஞங்களும் நானே); ‘த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே’ (கேவல வைதிகர்கள் யஜ்ஞங்களைச் செய்து ஸோம மருந்திப் பாபங்களினின்றும் சுத்தர்களாய் என்னிடத்தில் ஸ்வர்க்கத்தை ப்ரார்த்திக்கிறார்கள்); என்பது போன்ற வர்ணாச்ரம தர்ம உபதேசங்களைப் பல படிகளிற் செய்தருளினன். அவற்றை விரிக்க இங்கு அவகாசமில்லை.

கர்மயோக பக்தியோக அதிகாரிகள்.

‘மூன்றாவது அத்யாயத்தில் சூத்ரர்கள் கர்மயோகம் செய்யக்கூடாதென்னும் நிர்ப்பந்தத்தை (ஸ்ரீக்ருஷ்ணன்) போக்கிவிட்டார்; 9-வது அத்யாயத்தில் அவன் பக்தி யோகத்துக்கும், மோக்ஷத்துக்கும் அர்ஹன் என்பதையும் காட்டினார்’ என்றார் இந்த ஸ்வாமி. சூத்ராதிகளும் மோக்ஷமடையலாமென்பதும், அதற்கு விதிக்கப்பட்ட உபாயத்தை அநுஷ்டிக்கலாமென்றும் உபநிஷத்துக்கள் கூறுவதை நம்பூர்வர்கள் தான் நன்றாய் வெளிப்படுத்தினார்கள்! 18-வது அத்யாயத்தில் ‘ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தி யா:’ என்னும் ச்லோக பாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகையில் ஸ்ரீதேசிகன் இதில் விதிக்கப்பட்ட த்விஜ சுச்ரூஷைக்கு விரோதமில்லாமல் ஆத்மார்த்தமான வைஷ்ணவ தீக்ஷை, ஜபம், பகவதாராதனம், பக்தி முதலியவைகளையநுஷ்டிக்கும் அதிகாரம் சாஸ்த்ரங்களில் சூத்ராதிகளுக்கு இருப்பதையும், அதன்

* ஸ்ரீபாகவதம் 11-வது ஸ்கந்தத்தில் உத்தவருக்குக் கண்ணன் செய்த உபதேசத்திலும் இவை வற்புறுத்தப்பட்டிருப்பதை நமது நேயர்கள் காணலாம்.

ப்ரகாரங்களையும், அநேக ப்ரமாணங்களைக்கொண்டு பரக்கவருளிச்செய்திருக்கிறார்.

ஆனால் உபநிஷத்துக்களில் ஸத்வித்யை, தஹரவித்யை, என்றுப்போல் சொல்லப்பட்ட ப்ரும்ம வித்யைகளை, வேதாத்யயநிகளுக் கர்ஹரல்லாத சூத்ராதிகளனுஷ்டிக்கலாமென்று கீதாசார்யன் சொல்லக்காணோம்! இவ்வித்யைகளையநுஷ்டிப்பதைத் தான் பக்தியோகமென்றும் உபாஸநம் என்றும் சாஸ்த்ரங்கள் கூறுவது. பரமைகாந்தியின் இந்த ஐகைய யோகமும், சரீரதாரணத்துக்காகச் செய்யப்படும் லௌகிக கார்யங்களும், பகவானிடத்திலுண்டாகும். அளவற்ற ப்ரீதியினால், அவன் உகப்பாகவும் அவனால் நடத்தப்படுகின்றதென்னும் நினைவுடன், ஆராதன ரூபமாகவுமே செய்யப்படவேண்டும் அப்படிச் செய்பவனுக்கு பகவத் ப்ராப்தி நிச்சயம், என்று 9.-வது அத்யாயத்தின் கடைசி ச்லோகத்தால் நிகமனம் பண்ணப்பட்டது. ‘தமேவம் லௌகிகாநி ஸரீரயாத்ராசேஷபூதாநி வைதிகாநி நித்ய நைமித்திகாநி கர்மாணி மத்ப்ரீதயே மச்சேஷதைக ரஸோ மயைவ காரித இதி குர்வந்......................’ என்று ஸ்ரீபாஷ்யகாரருளிச்செய்தார். இதனால் யோகாப்யாஸம் செய்பவர்கள் அதை பக்திரூபமாகச் செய்யக்கடவர்கள் என்றதாயிற்று. ஸ்ரீஆளவந்தார் இவ்வர்த்தத்தை ‘நவமே ஸ்வமாஹாத்ம்யம் பக்திஸ்வரூபம் ... வ: பக்தியோக:’ (பக்திரூபமான யோகம் சொல்லப்பட்டது) என்று ஸங்க்ரஹித்தருளினர்.

இத்தகைய உபாஸநம் ஸர்வேச்வரனை அவனுடைய ஸ்வரூப குணங்களோடு இடைவிடாமல் த்யானம் செய்வதுதான். இதற்குக்காரணமாய் பகவானிடத்தில் சேதனர்க்குண்டாகும் அளவற்ற ப்ரீதிக்கும் பக்தி யென்று பெயர். இதுக்கு பக்தியோகம் என்கிற பெயர் இல்லை. ஆனால் உபநிஷத்வித்யைகளில் அதிகாரமில்லாதவர்களுக்குக்கூட, இந்த பக்தியானது, பரஜ்ஞாநம் பரமபக்தி என்னும் ப்ரகாரங்களில் மேன்மேலும் செழித்தோங்கி, ஷிஉபாஸகர்களுக்குண்டாகும் பகவத் ஸாக்ஷாத்காரம் முதலிய தசைகள் உண்டாகக் குறையில்லை. இதை ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உபாயவிபாகாதிகாரத்தில் தெளிய நிரூபித்தருளினர்.

இப்படி 9-வது அத்யாயத்துக்குப் பொருள் கொள்வோமானல், கீதைக்கும் வைதிக சாஸ்த்ரங்களுக்கும் விரோதமில்லை யென்பது விளங்கும். இதனால் சூத்ராதிகளுக்கு ஒரு குறைவுமில்லை. சாஸ்த்ரத்தை நிர்ப்பந்தித்து அர்த்தம் பண்ணுவதினால் அவர்களுக்கு வரும் ப்ரயோஜனமுமில்லை.

இதேமாதிரியாகக் கர்மயோகமென்பதையும் அறியவேண்டும். கர்மயோகமென்பது சாஸ்த்ரமுகமாக ஜீவேச்வர ஸ்வரூப ஸம்பந்தங்களைப் பற்றிய

ஞானம் பிறந்தவன், சித்தசுத்தி பெறுவதற்காகவும், அதற்கு விரோதியான பாபங்கழிவதற்காகவும், ஸத்வகுணம் பெருகுவதற்காகவும், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட நித்ய நைமித்திக காம்யகர்மங்களோடு பலஸங்கம், தான் செய்வது என்னும் நினைவு, முதலியதில்லாமல் கேவலம் பகவதாராதனரூபமாக ஸ்வ வர்ணாச்ரம நியமத்துடன் பரிக்ரஹிக்கும் கர்மமொன்று. இதுதான் 3-வது 4-வது அத்யாயங்களிற் சொல்லப்பட்டது. இவ்வர்த்தம் 4-வது அத்யாயத்தில் 'ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்மஹவி:', 'ஸர்வேப்யேதே யஜ்ஞவித:', என்னும் ச்லோகங்களால் விசேஷித்துரைக்கப்பட்டிருப்பதை அவற்றின் பாஷ்யங்களில்கண்டுகொள்வது. இப்படி பரிக்ரஹிக்கப்படவேண்டிய கர்மங்களின்னவென்று 4-வது அத்யாயத்தில் 'தைவமேவாபரே யஜ்ஞம்' என்று தொடங்கிச் சொல்லப்பட்டன. இவற்றில், வைதிகங்களான ஹோமம், யஜ்ஞம், தானம், தபஸ், வேதாத்யயனம், வேதார்த்தாநுஸந்தானம், என்பவைகளுடன் வேறு கர்மங்களும் சேர்க்கப் பட்டிருப்பதால், அவை சூத்ராதிகளநுஷ்டிப்பதற்கென்றே சொல்லப்பட்டனவாம். திவ்யதேசயாத்ரை, பகவதாராதனம், ப்ராணாயாமம் முதலியவற்றிற்கு வேதாத்யனம் வேண்டாமே!; அவைகளைப் பலத்தில் ஆசையில்லாமல் செய்தல் கர்மயோகமல்லவா?; ஆகையால் அவற்றை சூத்ராதிகள் செய்யத்தட்டென்ன?; என்பது நம் உரையாசிரியரின் அபிப்ராயம் போலும்!

இதற்கும் கீழ்க்கூறியதே ஸமாதானம். உபாஸநத்துக்கு அங்கமாகச் செய்யப்படும் கர்மத்துக்குத்தான் கர்மயோகமென்று வ்யவஹாரம். ஆகையால் பக்தி யோகத்துக்கு யார் அதிகாரியோ அவன் தான் கர்மயோகத்துக்கதிகாரி. பக்தி யோகத்துக்கு வர்ணாச்ர தர்மங்களாகிய வேதாத்யயனம் அக்நிகார்யம் முதலியவை அங்கங்கள். அவைகளை த்விஜர்கள் தான் அநுஷ்டிக்கலாம். வர்ணாச்ரம தர்மங்களை க்ருஷ்ணன் தொலைத்துவிடவாவது மாற்றவாவது இல்லையென்பதை முன்பே கண்டோம்.

நிஷ்காம்யமாக, பகவதாராதனரூபமாக எந்த ஜாதியாரும் தங்கள் தங்களுக்குறித்தான கர்மங்களைச் செய்யக்குறையில்லை. அதனால் ஸத்வகுணம் முதலியவை வ்ருத்தியாவதும் நிச்சயம். கர்மயோகம் என்று பெயரில்லாததால் நிஷ்காம்யகர்மத்தின் பெருமை குறையாது. 'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:' (ஸ்த்ரீ சூத்ராதிகளும் தங்கள் தங்களுக்கு விஹிதங்களான கர்மங்களினால் பகவானை ஆராதித்து மோக்ஷமடைகிறார்கள்) என்று சரண்யனே அருளிச்செய்தான். மந்த்ர ஸம்பந்தமில்லாமல் ச்வாஸத்தை அடக்கிச்செய்யும் வ்யாயமங்களுக்கு (breathing Exercises) மட்டும் ப்ராணாயாமம் என்னும் பெயர் கிடையாது!

த்விஜர்களே யோகப்யாஸத்தைவிட்டு வெகு காலமாய்விட்டது. அதை க்ரமமாய்ச் செய்யச் சக்தியுள்ள அதிகாரிகளையும் காணோம். அது மோக்ஷோபாயம் என்பதில் இக்காலத்தவர்க்கு விசேஷ நம்பிக்கையுமில்லை. இப்படியிருக்கக் கீதாசார்யன், வைதிக ஸம்ப்ரதாயத்தை மாற்றி இந்த யோகத்தை எல்லாருக்கும் அதிகாரமாகச் செய்துவிட்டார் என்பதில் என்ன லாபம்!

எல்லாவஸ்துக்களையும் கும்பிடவேண்டுமோம்!

"ஒன்பதாவது அத்யாயத்தின்கடைசி (34-வது)ச்லோகத்தில் 'என்னை நமஸ்காரம் பண்ணு' என்று சொல்லிவிட்டு; 10-வது அத்யாயத்தில் ஸ்ரீக்ருஷ்ணன்ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களும் தானும் ஒன்றென்றார்" (He identifies Himself with everything in the world, including the lowest). என்றாலும், அந்திமஜாதியானொருவன் முன் விழுந்து வணங்குவதென்பதை இந்த (பகவத்ராமாநுஜமத?) ஸம்ப்ராதய ப்ரவர்த்தகர்கள் ஒருபடியாலும் ஒப்பமாட்டார்கள் என்பது ஸ்ரீமான் வி.கே. ராமாநுஜாசார்யஸ்வாமியின் தூஷணங்களில் ஒன்று. சென்ற ஹூலத்தில் ராஜமன்னார்கோவிலில் நடந்த வித்வத் ஸபையில் இதையும் இன்னும் சில வாதங்களையும் இவர் தொடங்கி அவற்றிற்கு வைதிக வித்வான்கள் சொல்லிய ஸமாதானங்கள் தீபிகையின் போன சித்திரை, வைகாசி மீ ஸஞ்சிகைகளில் வெளியாயிருக்கின்றன. அவற்றை இங்கு விஸ்தரிக்கவேண்டுவதில்லை. ஸ்ரீபாகவதத்தில் கண்ணன் உத்தவருக்குபதேசித்ததும் அங்கு விசாரிக்கபபட்டிருக்கிறது. ப்ரஹ்லாதாழ்வான், ஸ்ரீசுகர், முதலியவர்களைப்போல் பக்திபரவசராய் ஒருவர் ''அஹம் ஹரி: ஸர்வமிதம் ஜநார்தந:' (நான் ஹரியே; நான் பார்க்குமிவையெல்லாம் ஜநார்த்தனனே) என்றும், 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்' என்றும், ஸர்வ பூதங்களிடத்திலும் ஆதரங்காட்டுவதை ஸ்ரீஉடையவராவது அவர் பின்னோராவது குறைவாக நினைத்தார்களென்று ஒருவரும் சொல்லத்துணியார்! 'சண்டாளன் மாடு கழுதை' முதலியவைகளைத் தெய்வமென்று தண்டனிடுகிறவர்களையும் ஒருவரும் கண்டதில்லை! வாயினால் சொல்லுவதுமட்டும் போதாது! இந்த ஸ்வாமியைப்போல் தாழ்ந்த ஜாதியாரிடம் பரிவுகாட்டுகிறதாகச் சொல்லுகிறவர்கள் கூட, சூத்ர சண்டாளாதிகளை எல்லோரும் காண நமஸ்கரிப்பதைக் காணோம்! மஹாவேதாந்திகளென்றும் ஆசார்யகம் பண்ணத்தகுந்தவர்களென்றும் தங்களால் பஹுமானிக்கப்பட்ட ஏதோ இரண்டொரு அந்யரை இவர்கள் வணங்குவதாய்க் கேட்டிருக்கிறோம். அதற்குக்காரணம், 10-வது அத்யாயத்தின்படி பகவத் விபூதிகள் என்பதினாலல்ல; அத்தகையவர்கள் விசேஷ ஜ்ஞாநவான்களென்றும் விசேஷ பகவத் கடாக்ஷத்தைப்பெற்றவர்களென்றும் தாங்கள் நினைப்பதுதான். அப்படியே தான் ஸர்வ வர்ணங்களிலும், 'குலங்களாய ஈரிரண்டிலொன்றிலும்' அல்லாத அந்திய ஜாதிகளிலும், அவதரித்த ஆழ்வார்கள் பக்கலில் ஸ்ரீதேசிகாதிகள் நிரதிசய

மான பக்தியைக் காட்டியிருக்கிறார்கள். சில வர்ஷங்களுக்கு முன், நாட்டுக் கோட்டையார் ஜாதியிற்பிறந்து வைஷ்ணவாக்ரேஸராய், பகவத் பாகவத பக்தி நிரம்பினவராய், தூப்புல் ஸ்ரீதேசிகன் ஸந்நிதி ஜீர்ணோத்தாரணம் முதலிய கைங்கர்யங்களைச்செய்த ஸ்ரீராமானுஜ தாஸர் பக்கலில் இப்போதைய சுத்த வைதிகர்களும் காட்டும் பக்ஷபாதத்தை நம்மாசிரியர் அறிவரோ? நிற்க, 9-வது அத்யாயத்தில் 'மாம் நமஸ்குரு' (என்னை நமஸ்கரி) என்பதிலுள்ள 'என்னை' என்பது தான் 10-வது அத்யாயத்தில் விளக்கப்படுகிறது, என்று இந்த ஸ்வாமி நினைத்தாரே ஒழியக் கண்ணனாவது அர்ஜுனனாவது நினைக்கவில்லையென்பது அவர்கள் வசனங்களினாலேயே ஸித்தம். 9-வது அத்யாயத்தில் பக்தியோகத்தையருளிச்செய்து, பக்தியின் ப்ரகாரரூபமான பகவதாராதன நமஸ்காராதிகளைச் செய்யக்கடவனென்று கடைசி ச்லோகத்தில் முடித்துவிட்டு, 10-வது அத்யாய ஆரம்பத்தில் 'நீ என்னிடத்தில் மிக ப்ரீதி பண்ணுகிறவன்; உன் ஹிதத்தைக்கருதி மறுபடியும் சொல்லுகிறேன் கேள்' என்று அவனுக்கு பக்தி வளர்ந்து நிலைப்பதற்காக பகவான் தன்னுடைய எல்லையில்லாத கல்யாணகுணங்களையும், ஐச்வர்யத்தையும் சொல்லி 'ஏதாம் விபூதிம் யோகஞ்ச மம யோ வேத்தி தத்வத: । ஸோऽவிகம்பேந யோகேந யுஜ்யதே நாத்ர ஸம்சய: ॥' என்றருளிச்செய்தார். இதன்பொருள்:—'என் விபூதிகளான ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல சேதனாசேதனங்களும் என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுத், தாங்கப்பட்டு, ப்ரவ்ருத்திப்பிக்கப்படுகின்றனவென்பதையும், முழுநலம் என்றபடியே, ஹேயஸம்பந்தமில்லாமல் ஸமஸ்த கல்யாண குணங்களுக்கும் நான் இருப்பிடமென்பதையும், உண்மையாக வறிந்து என்னை பஜிக்கிறவன், கொஞ்சமேனும் அசைக்கமுடியாத பக்தியோகத்தோடு கூடியிருப்பான்' என்று. இங்கு 'விபூதிம் யோகஞ்ச', என்பதற்கு இதுதான் அர்த்தமென்பது, முந்திய ச்லோகங்களிலும், இதனடுத்த 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:' (நான்எல்லாவற்றிற்கும் உத்பத்திஸ்தானம்), என்ற ச்லோகாதிகளாலும் விளங்குகிறது. இதில் விபூதியை அறிவது என்பதற்கு, 'அவையெல்லாம் பகவான் என்று நினைத்து வாயால் சொல்லி நமஸ்கரித்தல்' என்று நம்மாசிரியர் சொல்லும் அர்த்தம் உருக்கமாயிருப்பினும், இவருடைய வேறு உக்திகளைப்போல் ப்ரகரணத்துக்கு ஒட்டவில்லையென்பது நன்றாய்ப் புலப்படுகிறது. அர்ஜுனனும், 'பூதபாவந பூதேச' (ஸகலபூதங்களையும் ஸ்ருஷ்டித்தவனே! ஸர்வர்களையும் நியமிப்பவனே!) என்று பகவானை ஸம்போதனம் பண்ணி (விளித்து) 'விஸ்தரேணாத்மநோ யோகம் விபூதிஞ்ச ஜநார்த்தந । பூய: கதய த்ருப்திர்ஹி ச்ருண்வதோ நாஸ்தி மேऽம்ருதம் ॥' ('நான் எல்லாவற்றிற்கும் உத்பத்திஸ்தானம்' என்று சுருக்கமாயருளிச்செய்

த தேவரீருடைய ஸ்ருஷ்டிக்கும் சக்தி,முதலிய கல்யாணகுணங்களையும், ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸகலசேதனா சேதனங்களையும், அவைகளை நியமிக்கும் சக்தி முதலியவைகளையும், விஸ்தாரமா யருளிச்செய்யவேண்டும். தேவரீருடைய அமுதமொழிகளைக் கேட்டும் கேட்டும் எனக்குப் பூர்ணமான த்ருப்தி யுண்டாய்விட்டதென்பதில்லை) என்று விண்ணப்பம் செய்தான். பின்னர், பகவான் 'நான் ஸர்வபூதங்களுக்கும் ஆத்மாவாகவிருப்பவன்' என்று தொடங்கித் தான் வேறு, தன் விபூதிகள்வேறு என்று பிரித்துச் சொன்னான். இவற்றையெல்லாம் கேட்டபிறகு, 11-வது அத்யாய ஆரம்பத்தில் 'இப்படித்தேவரீர் அருளிச்செய்த ப்ரகாரம் ஸகலப்ரபஞ்சத்தையும் ஸ்ருஷ்டித்து, நியமித்து, ஸம்ஹரித்துச் செய்யும் நியமனங்களையும், ஸகலத்தையும் தாங்குகின்ற கல்யாணகுணங்களையும், ஸகலத்துக்கும் மேற்பட்டதான பரத்வத்தையும் தெரிவிக்கும்படியான, விச்வரூபத்தைக் காட்டியருளவேண்டு'மென்று ப்ரார்த்தித்தான். ஸ்ரீ க்ருஷ்ணனும் அதற்கிசைந்தார். எனவே, 10 வது அத்யாயத்துக்குப் பொருள் எப்படிக்கொள்ள வேண்டுமென்பதை நமது ஆசிரியர் மறுபடியும் ஆலோசிக்கட்டும்!

பகவதாஜ்ஞையும் நிக்ரஹமும்.

கீதையில் சொல்லப்பட்ட ஈச்வரனுக்குக் கோபமில்லையாதாம்; ப்ரீதியே நிரம்பினவராம். உபநிஷத் முதலியவைகளின் தைவமெப்படியாம்? 'பகவானுடைய ஆஜ்ஞையைக் கடப்பதென்னும் பாபத்திற்காக சிக்ஷையில்லை. ஆனால் மனிதர்கள் தப்புவழிகளில் நடவாதபடி செய்யச் சில துன்பங்கள் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன' (There is no punishment for sin or wrong-doing, merely on the ground that it is disobedience of God's command. Penalties are attached in order to turn men away from wrong doing) என்றார். துன்பங்களைச் சேர்த்தது யார்? யாருடையகட்டளையினால் அல்லது சக்தியினால் அவை சேதனர்களால் அனுபவிக்கப் படுகின்றன? இது முன்னுக்குப் பின் விரோதமாயில்லையா? 'வழிதப்புவது' என்பதைத்தான் ஆஸ்திகர்கள் 'பாப' மென்பார்கள். அதன் பலனாகத் துக்கானுபவ முண்டானால், அது ஈச்வர ஸங்கல்பத்தா லுண்டாவது நமது ஆசிரியர்க்குப் பிடிக்கவில்லை போலும்! ஈச்வரனுக்கு அந்த அதிகாரம் கூடாதென்றால், யாருக்குஅதைக் கொடுக்கலாம்? ஸுக்ருத்திய துஷ்க்ருத்யங்களுக் கீடாகப் பலம்கொடுக்க யோக்யதை யில்லாத வெறும் நல்லவரான ஒரு ஈச்வரனைக் கொண்டாவதென்ன?

'பலமத உபபத்தே:' என்னும் ஸூத்ரத்னால் பாதராயண பகவான், ஸர்வேச்வரனே சேதனர்களுடைய கர்மங்களுக்கீடாக அநுக்ரஹ நிக்ரஹங்களைப் பண்ணுகிறவன் என்பதின் பொருத்த முடைமையைத் தெளி

வித்தார். கீதையிலும், 'தாநஹம் த்விஷத꞉ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு ॥' (த்வேஷிகளும் க்ரூரர்களுமான அந்த நராதமர்களை அஸுரயோனிகளிலேயே ஓயாமல் ஸம்ஸரிக்கும்படி தள்ளிவிடுகிறேன்) என்றும், தைவப்ரக்ருதிகளைப் பற்ற 'ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ।' (என்னை அவர்களடைவதற்குபயுக்தமான புத்தியைக்கொடுத்தநுக்ரஹிக்கிறேன்) என்றும், ஸ்ரீ க்ருஷ்ணனே அருளிச்செய்தார்.

முடிவுரை.

இப்படிப்பட்ட வாதங்களும், அநேகவிடங்களில் ச்லோகங்களுக்கு ஸந்தர்ப்பத்துக் கொட்டாத அர்த்தங்களும், இவ்வுரையில் நிரம்பவிருக்கின்றன. அவைகளை எளிதாய் இந்தப்ரகாரங்களில் பரிஹரிக்கலாம். இப்படி எழுதினதைவிட,பகவத்ராமாநுஜ பாஷ்யத்தை யநுஸரித்து ஆங்கிலமொழி பெயர்ப்பையும் உரையையும் வெளியிட ஆரம்பித்த இந்தஸ்வாமி, அதைப் பூர்ணமாய் அநுஸரித்திருந்தால் அது பஹுஜந உபகாரகமா யிருந்திருக்கும். பலருக்கும் த்ருப்தியைக் கொடுத்திருக்கும். ஆனால் பிறர் ஆக்ஷேபங்களுக்குத் தாம் தயங்குவதில்லையென்று அவரே சொல்லிவிட்டார்!

கடிதங்கள். நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர்.

பகவதபசாரம்.

தன்னுடைய தேஹயாத்ரையை நாமிட்ட வழக்காம்படி பண்ணிக்கொண்டு பொறுமைக்கு எல்லைநிலமாய் அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனுடைய ப்ராவண்யத்தை என்னென்று நினைப்பது! பாஷ்யகாரர் காலத்தில் ஒருஸமயம் முதலியாண்டான் ஒருநாள் நித்யமாக நடக்கவேண்டிய ஆராதனக்ரமத்தில் தவறுதலாய் பாலமுதுசெய்யப் பண்ணினபின் நாவல்பழத்தைப் பெருமாளுக்கு அமுதுசெய்வித்து, அதினாலே மிகவும் பயந்து பாஷ்யகாரர் ஸந்நிதியிலே விஜ்ஞாபனம் செய்ய அதற்கு அவரும் கலங்கி தகுந்த ப்ராயச்சித்தம் செய்து அதைப் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும் என்று நியமனம்செய்ய அதற்கு முதலியாண்டான் 'ஸர்வம் பக்ஷயத꞉ பயம்' [சராசரங்களைத் தன்னுடைய உதரத்தின் ஏகதேசத்தில் வைத்து சாப்பிடுகிற ஸர்வேச்வரனுக்கு எதை சாப்பிட்டால் என்ன?] என்றாராம்! பாஷ்யகாரர் 'உமக்கு இவ்விதமான அஜ்ஞானம் நசிக்கவேணும்' என்றருளிச்செய்தாராம். அர்ச்சாவதாரம் பண்ணி ஸதாஸந்நிஹிதராகவும், பெரிய பட்டணங்களில் நடுவில் தன்னுடைய கோபுரங்களாலும் மதில்களாலும் நம்மை வழிமறித்து 'எனக்கு ஒரு அஞ்சலிபண்ணினால் ஸர்வவிதமான பாபமும் போகும்' என்று சொல்லுகிறாப்போல மத்ய ப்ரதேசங்களிலும் ஸாந்நித்யம் செய்துவருகிற பகவானை இந்த விதமாக வல்லவோ நம் பூர்வர்கள் உபசரித்தார்கள்!

ஸமீபத்தில் திருக்குடந்தையில் ஸங்கிரமணோத்ஸவத்தில் கருடஸேவை யன்று பெருமாள் வீதிப்ரமணமாய் வரும்போது, ஒருவர் தான் கொண்டுவந்த ரோஜாபுஷ்பமாலையை நடுத்தெருவில் பெருமாளுக்குச் சாத்தவேணும் என்று நினைத்து அர்ச்சகர்கள் கையில் கொடுத்தார். உடனே அர்ச்சகர் கொஞ்சமேனும் யோசிக்காமல் கருடவாகனத்தின்மேல்

கருடனுடைய நீட்டினகையில் தன் காலைவைத்து ஏறிப் பெருமாளுக்கு அதைச்சாத்தினார். அந்த சமயம் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த வைபவத்தை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருக்கால் ப்ரும்மதேவர் ஸீதாபஹரணமான மஹாபராதத்தை ராவணன் செய்யும் காலத்தில் சொன்னதுபோல், 'க்ருதம் கார்யம் இதி ஸ்ரீரங்க வ்யாஜஹார பிதாமஹ:' [பூமியின் க்லேசத்தை எப்படி நிவர்த்திப்போம். கருணா ஸமுத்ரமாகிற சக்ரவர்த்தித்திருமகனுக்குக் கோபலேசங்கூட உண்டாகவில்லையே என்றுபார்த்து நாளெண்ணியிருந்த ப்ரும்மதேவர் 'நம்முடைய கார்யம் ஆய்விட்டது என்றுசொன்னார்'] என்றமாதிரி நினைத்தார்கள்போலும்! அதற்கனுகுணமாக அன்றுதினம் முதல் ஸங்கிருத்திவரையிலும் காளமேகங்கள்தானோ என்று ஸந்தேஹப்படும்படியாய் ஓயாமல் மழைபெய்து ஜனங்களும் பயிர்களும் வெள்ளத்தில் அகப்பட்டு அவரவர்களுடைய ஆஹாரத்துக்கு லோபம் வரும்படியான நிலையாய்விட்டது. பெருமாளுக்கும் உத்ஸவமே மழையினால் கிடையாது. மன்னார்குடியிலும் ஒரு விவாதத்தினால் ராஜகோபாலனுக்கும் நித்யோத்ஸவங்களும் அத்யயனோத்ஸவமும் நின்றுவிட்டனவாம். பெரிய ஏகாதசியன்று பெருமாள் பர்ராவிலிருந்தாராம்!

உபயவிபூதிநாதனான ஸர்வேச்வரனுக்கு அர்ச்சாவதாரத்தில் பரிவரில்லாமையையும் ப்ரதிகூலவர்க்கங்கள் அதிகரித்திருப்பதையுங்கண்டு நெஞ்சாரல்பட்டு 'கண்ணும் பக்லும்' ஸர்வேச்வரனைப் பல்லாண்டுபாடி மங்களாசாஸனம்பண்ணுகிற பெரியோர்களில்லாத்தினாலன்றோ இந்த மாதிரி ஸம்பவங்கள் நடக்கின்றன!

'பெருமாள் உலாவிவரும்போது அவர்திருமேனிக்கு ஏதாவது சலனம் ஏற்பட்டால் என் ப்ராணன்கள் போய்விடும்' என்றுசொல்லி ஒருபாகவதோத்தமர் ஸ்ரீபாதம் தாங்கிகளின் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு ப்ரார்த்திப்பார்' என்று ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானத்தில் நாம் கேட்டிருக்கிறோம்.

'நடந்த கால்கள் நொந்தவோ' என்றும் ஆழ்வார்கள் ப்ரேமையினால் அந்த பகவானுடைய பரத்வத்தை மறந்து அவனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களிலே ஈடுபட்டுக்கலங்கினார்; லோக ரக்ஷகனானவனைத் தாங்கள் ஸஹஸ்ராக்ஷர் வ்யூஹநிகளாயிருந்து காப்பாற்றி வந்தார்கள்.

ஆளவந்தாரும் தன்னுடைய அந்திமதசையில் ஸ்தாநத்தாரைப்பார்த்து 'பெரிய பெருமாளுடைய திருவாராதனம் மந்த்ரபுஷ்பம் காலாகாலங்களிலே நடத்திக்கொண்டு போருங்கோள்; ஆசார்யர்கள் முதலிகள் தேசாந்திரிகள் முதலானாரை அரவணைத்துக்கொண்டு போருங்கள்' என்று அருளிச்செய்ததாகத் தெரிகிறது.

பாச்சாத்ய ஸம்ஸ்காரத்தில் தேர்ந்து (சரீர) ஸ்வரூபாந்யதாபாவமும் ஸ்வபாவாந்யதா பாவமு மடைந்தவர்கள் உலகத்தில் நடக்கிற அதிவ்ருஷ்டிக்கும் அநாவ்ருஷ்டிக்கும் பஞ்சத்துக்கும், கோவிலில் பெருமாளுக்குப் பண்ணும் அபசாரத்துக்கும், என்ன ஸம்பந்தம் என்று கேட்கலாம். ஆனால் நம்மைப்போன்றவர்கள் பகவதபசாரந்தான் இவ்வளவு துர்ப்பிக்ஷம் முதலிவைகளுக்குக் காரணம் என்று சொல்லத்தட்டில்லை.

'ஸ்ப்ருஷ்ட: ஶ்ருதோ வா த்ருஷ்டோ வா' எப்படியானால் பலத்தைக்கொடுக்குமோ அப்படியே அதர்மமும் பார்த்தாலும், கேட்டாலும், பாபத்தைக்கொடுக்கும். அவ்வ பாபங்களினின்றும் நம்பிரான் நம்மை எல்லாரையும் ரக்ஷிக்கவேண்டும். இந்த மாதிரி அபசாரங்களைத் தடுக்க சக்தியில்லாத நம்போன்றவர்கள் அந்தச் சமயங்களில் கண்ணை மூடிக்கொண்டு க்ருஷ்ணஸ்மரணம் செய்வதுதான் சக்யம்.

யாட்ராசார் தெருவு, கும்பகோணம். } டி. ராமசாமி அய்யங்கார்.

குறிப்பு:—(இந்நிருபகர் எழுதியிருக்கும் ஸமாசாரம் உண்மையானால் அது மிகவும் சோசிக்கத்தக்கது. இவ்வித ஸம்பவங்கள் நேராதபடி கோவில்அதிகாரிகள் கவனிப்பார்களென்று நம்புகிறோம்—பத்திராதிபர்.)

ஹிந்து மதஸ்தாபந மசோதா.

இதை ஆராய்ந்து ரிபோர்ட்டு செய்யும்படியாகச் சென்னைச் சட்டச்சபையால் நியமிக்கப்பட்ட தனிக்கமிட்டியார் (Select Committee) சில சாக்ஷிகளை விசாரித்தும், பத்ரிகைகள் மூலமாகவும் நேராகவும் தெரிவிக்கப்பட்ட ஆக்ஷேபங்களை யனுஸரித்தும், ஷை மசோதாவில் வெகு மாறுபாடுகளைச் செய்திருக்கிறார்கள் என்னும் விவரம் தீபிகாபிமானிகளுக்குத் தெரியவந்திருக்கும். அவற்றில் முக்கியமானவை மடங்களின் பேரில் ஆதிக்யம் செலுத்துவதையும், மிகுதியான த்ரவ்யங்களைப் பொதுவிஷயங்களுக்குச் சிலவிடுவதையும், கவலைக்கிடமான மற்றும் சிலவிஷயங்களையும் பற்றியவை. இந்தக் குறிப்பை நாம் எழுதும்போது ஷை தனிக்கம்மிட்டியாரின் யாதாஸ்து இன்னும் ப்ரசுரிக்கப்படவில்லை. இவ்வம்சங்களில் ஷையார்கள் மஹாஜனங்களுடைய அபிப்ராயங்களை எவ்வளவு வரையில் மதித்திருக்கிறார்கள் என்பது தெரியவேண்டும்.

தேவஸ்தானாதிகளின் ஸம்பந்தமாக உண்டாகும் வ்யவஹாரங்களை முடிவாகத்தீர்மானம் செய்துவிடுவதற்கு, மாகாணம் முழுவதற்கும் தலைமையான நிர்வாஹஸபை Central Board of management) யொன்றை ஏற்படுத்தவேண்டும் என்றும், அவைகளை ஸாதாரணக் கோர்ட்டுகளுக்கு விடக்கூடாதென்றும் ஸாக்ஷியம் கொடுத்தவர்களில் ஒருவர் சிபார்சு செய்ததாயும் அதை ஷை கம்மிட்டியார் ஏற்றுக்கொண்டிருப்பதாயும் தெரியவருகிறது. இங்கிலாந்தில் தர்மாதிகாரிகள்(Charity Commissioners) என்று இவ்விதம் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். இந்தச் சிபார்சு நிறைவேறினால் அதற்கு உத்யோகவிஷயமாகச் சலுகைகாட்ட அதிகாரக் கக்ஷியார்க்குப் புது அவகாசங்கள் கிடைக்கும் என்னும் ஒரு விஷயம்தான் ப்ரயோஜநம் ஏற்படும். புது உத்யோகங்களின் சிலவுக்காக ஆலயங்களும் மடங்களும் வரிகொடுக்கவேண்டிவருமென்பதும் நிச்சயம். தர்மகர்த்தாக்களோ, கம்மிட்டியார்களோ, கோவில்வகையறா சிப்பந்திகளோ, கோர்ட்டு வ்யவஹாரலீலைகளை நடத்த அபேக்ஷித்தால், அவர்கள் தங்கள் சிலவிலேயே ஏற்கனவேயுள்ள ந்யாயஸ்தலங்களில் விளையாடட்டுமே! அதற்காக மத தர்ம ஸ்தாபநங்களின் பணத்தைச் சிலவுசெய்து புதுமாதிரியான கோர்ட்டு ஒன்றை உண்டாக்கவேண்டுமா? தர்ம சொத்துக்களை அயோக்யத்தனமாகக் கையாடுபவரை ஸமான்யமான க்ரிமினில் ஸிவில் கோர்ட்டுகளில் தொடர்வதற்கு என்ன ஆக்ஷேபணை? ஏற்கனவே யுள்ள அதிகார வர்க்கங்கள் போதாதென்று புதியதாய் ஒன்றை ஏற்படுத்துவது ஜனங்களுக்குத்தான் நன்மையாகுமோ? தவிர மதபேதங்களும் அபிப்ராய பேதங்களும் அமைப்பில் வித்யாஸங்களும் நமது ஸ்தாபனங்களில் பலவாறாகக்காணப்படுகின்றன. ஸ்தாபனங்களும் நாட்டில் ஒன்றுக்கொன்று வெகு தூரப்ரதேசங்களிலிருக்கின்றன. ஜனங்களே பலவிதமாயிருக்கின்றார்கள். எனவே ஒரே மதஸ்தராயும் ஒரே நடையுடைபாவனைகளையுடையவராயும் உள்ள ஜனங்களடங்கிய சிறிய ப்ரதேசமாகிய இங்கிலாந்தை நமக்கு உபமானமாகக் கொள்ளலாமா? தன் உரிமைகளை ரக்ஷிக்க அபேக்ஷிக்கிறவனுக்கு ந்யாயஸ்தலங்களில் பிராது, அப்பீல், முதலியவைகளின் மூலமாய் பரிஹாரம் தேடும் பாத்யதையை ஒழித்து விடுவது ந்யாயமாகுமா? இப்படிச்செய்வதற்கு, மாப்பிள்ளைமார் கலவரம் மாதிரியான அவசரம் என்ன வந்துவிட்டது? அல்லது இதனால் விசேஷ பலம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?

தனிக்கம்மிட்டியார் ரிபோர்ட்டு ப்ரசுரமான இரண்டு வாரத்தில் இந்த மசோதா சட்டச்சபையில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாம்! இதென்ன தடபுடல்? 'ஆக்ஷேபணைக்கு 2 - வாரம்', 'சாக்ஷியத்துக்கு 2 - வாரம்', அடுத்த வாரத்தில் ஹியரிங்கு' என்று மாஜிஸ்த்ரேட்டு உத்திரவிடுவதைக் கண்டிருக்கிறோம்! நாட்டிலுள்ள ஜனங்களையெல்லாம் ஆத்யந்திகமாகப் பொறுத்ததான சட்டத்தைச்செய்ய இவ்வளவு அவஸரமென்ன? ஐம்பது வர்ஷங்களுக்குமேல் காத்துக்கொண்டிருந்த இந்த விஷயம் இன்னும் இரண்டொருமாதம் தாங்காதா? இரண்டு வாரங்களுக்குள் சென்னை ராஜதானி ஜனங்கள் தனிக்கம்மிட்டியாருடைய சிபார்சுகளையும், தலைமையான நிர்வாஹ ஸபையைப்பற்றிய புது ப்ரேரணையையும் ஆலோசித்துத் தங்கள் அபேக்ஷிதங்களைச் சட்டசபைக்குத் தெரிவித்துவிடமுடியுமா?

சட்டச்சபையில் செல்வாக்குள்ள கக்ஷியார் ஜனங்களுடைய உத்திரவையநுஸரித்து இம்மசோதாவைக் கொண்டுவரவில்லையென்பது ஆங்காங்கு கிளம்பிய கணக்கற்ற ஆக்ஷேபங்களினாலேயே ருஜுவாய்விட்டது. மேல்நாட்டு நாகரீகருசியையும் அதிகாரருசியையும் கண்டவர்கள் தங்கள் மனதில் ஹிதகரம் என்று நினைப்பதே ஜனங்களுக்குப் பத்தியமாகாதென்பதை காலஞ்சென்ற ஸர் பாஷ்யமய்யங்கார் சட்டச்சபையில் நிறைவேற்றிவைத்த 'ஹிந்து வித்யார்ஜ்ஜித த்ரவ்யமசோதா' Hindu gains of Learning Bill) வை அக்காலத்திய கவர்னர் நிராகரித்துவிட்டதிலிருந்து அறியலாம். அம்மசோதா ஒழிந்து 20 - வருஷங்களாயினும்! நமக்கு ஒரு தீங்கும் வந்துவிடவில்லை. மேலும், இந்தச் சட்டசபையும் சீக்கிரத்தில் கலைத்துவிடப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது புதுமெம்பர்கள் தேர்தலாகும்போது இம்மசோதா விஷயமாக 'வோட்' (Vote) கொடுக்கும் ஜனங்களுடைய நோக்கம் மாறலாம்.

இவற்றையெல்லாம் மேன்மை தங்கிய கவர்னரும், அவருடைய ஆலோசனை ஸபையாரும், சட்டச்சபை அங்கத்தினரும் அவர்களில் விசேஷித்து ஹிந்துக்களல்லாதவர்களும், தீர்க்கமாய் யோசித்து மஹா ஜனங்களுடைய பூர்ணமான அங்கீகாரமில்லாத இத்தகைய மசோதாவாவது, அதன் எந்த

அம்ஸங்களாவது கக்ஷியின் பலத்தினுல் சட்டமாய் விடாமற் காப்பது தங்கள் கடமை யென்பதை யறிவார்கள் என்று நம்புகிறேம்.

பத்ராதிபர்.

பௌத்தமதமும் ஜைநமதமும் (ஓர் ஸங்க்ரஹம்.)

"பஹுஜநங்களுடைய மனதில் ஜைந பௌத்த ஸமயங்களைப் பற்றிய ஒரு விதமான விப்ரதிபத்தி [Confusion] யிருக்கின்றது. ஆனுல் இவ்விரண்டு மதங்களும் பரஸ்பரம் அத்யந்தம் வேறுபட்டவை. மோக்ஷமடையத் துறவு (asceticism)பயனற்றது என்று புத்தமத முணர்த்துகின்றது; ஜைநமோ, அதை இன்றியமையாத தென்றது. ப்ராம்மண மதத்தின் ஸந்யாஸாம்சத்தை ஜைனமானது படிப்படியாய்ப் பெருக்கி ப்ராம்மணரைவிட அதிகக் கடுமையாகத் துறவரம் நடத்துவதில் ஒரு தற்பெருமையைப் பாராட்டுகிறது. துறவியின் ஜுகுப்ஸையான வாழ்வை அவனுடைய ஸர்வோத்க்ருஷ்டமான நிலைமை யென்று ப்ரமித்தது. புத்தமதமோ வென்றுல் துறவிகளின் வாழ்வையும் மானிடத் தன்மைக்குப் பொருந்தியதாக நடத்திவைக்க முயலுகின்றது. ஜைனத்தில் அஹிம்ஸா தர்மமானது விபரீதமாகப் பரிணமித்து ப்பரமாணு ப்ரமாணமான க்ருமியையும் அழிக்கலாகாதென்று சொல்லி அதற்காக பரிஹாஸ்யங்களான முன்ஜாக்ரதைகளை விதித்தது. ஜைனர்கள் ஜீவஹிம்ஸையை நிவர்த்திக்கப் படும் பாட்டைப் பார்த்தால், காற்றுக்கும்கூடத்தீங்கு இழைக்காமலிருக்க எத்தனிக்கின்றுர்கள்போல் காணப்படும். அவ்விதமாகவே பிறர்ஸொத்தை அபகரிக்கலாகாது என்னும் தர்மமானது, உடம்பைமூட வஸ்த்ரமும் தரிக்கக்கூடாது, என்கிறவரையில் வ்யாக்யானமாய் விட்டது! சுருங்கச் சொல்லில் மதமென்று பெயர்வைத்துத் தற்கொலையை ஜைன்மத முபதேசுத்து. ப்ராஹ்மண மதத்தில் முக்தமாயும் நித்யமாயும் [absolute and permanent] உள்ள ஆத்மா உண்டென்றும் அது ஏகரூபமாயும் ப்ரபஞ்ச ரூபமாயும் இருக்கு மென்றும் சொல்லப்படுவதெல்லாவற்றையும் பௌத்தமதம் நிராகரித்தது. ஜைனமோ வென்றுல் ப்ராஹ்மணர்களுடைய ஆத்ம ஸத்பாவ வாதத்தை ஒப்புக்கொண்டுவிட்டது. ம்ருகம் முதலிய ப்ராணிகளுக்கும் பஞ்சபூதங்களுடைய அதிஸூக்ஷ்மமான அம்சங்களுக்கும்கூட ஆத்மா உண்டென்பது அவர்களுடைய ஸித்தாந்தம். பௌத்தர்களோ இதை ஒப்புவதில்லை. மேலும், ஜைனர்கள் ஜாதி வித்யாஸங்களை மிகவும் பாராட்டுகிறவர்கள். ஆனதுபற்றியே அவர்கள் தங்களுடைய மதத்தை ஜாதி வித்யாஸங்களினுல் தகர்ப்புண்ட இந்தியாவின் நான்கு எல்லைகளுக்கு வெளியில் கொண்டுபோக முடியவில்லை. பௌத்தர்கள் தங்களுடைய அந்தரங்க வாழ்விலும் பஹிரங்க நடவடிக்கையிலும் ஒரே மாதிரியான தர்மத்தை அனுஸரிப்பவர்கள். அத்தர்மங்கள் இடைவிடாமலும் நிர்த்தோஷமாயும் அனுஸரிக்கப்படுவதினுல் மனிதவாழ்க்கைக்கு ஓர் ஸ்வாதந்தர்யம் ஏற்படுகின்றது. வெளி வேஷங்களான க்ரியாகலாபங்களில் விசேஷபலமுண்டாகும் என்னும் நம்பிக்கையினுலும் ஜந்மாந்தரங்களில் ஏதோ கிடைத்துவிடும் என்னும் ஆவலினுலும் பௌத்தருடைய தர்மாசரணங்கள் களங்கப்படுகிறதில்லை"—ஜாதி நியம பராமர்சம் (study of caste) ஸ்ரீமான் பி. லக்ஷ்மீநரஸு அவர்கள் இயற்றியது.

𑌚𑌰𑌮𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃.

[illegible]

ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்.

மூன்றுவது சரமச்லோகாதிகாரம்.

இருக்கட்டும்; 'விட்டுவிட்டு' என்று ல்யபந்தமாயிருக்க (வினையெச்சமாயிருக்க) இது எப்படி அதிகாரமில்லாமையை அநுவாதம் பண்ணும் (அதாவது முன்பே ஸித்தமாயிருக்கும்) பொருளைக்காட்டும்? என்றுல் அது இவ்விதம்—ஒருவனுல் செய்யப்படுகிற கார்யங்களுக்குள் முன்னுல் செய்யப்படவேண்டியதைக் குறிக்கிறது ல்யப் என்னும் விகுதி, என்கிறபடி இரண்டு கார்யங்களும் ஒருவனுலேயே செய்யத்தக்கவைகள் என்பதும், தன்னுடன் சேர்ந்த பதத்தினுல் சொல்லப்படுகிற கார்யம் முன்பு செய்யத்தக்கதும் ல்யப் என்னும் விகுதிக்குப்பொருள். விதி அநுவாதம் என்பதும் அதின் பொருளல்ல. இதற்கு முன்பு ஏற்படாமையினுல், 'தாரணத்தைப்பற்றி விதிதான்' என்கிற மீமாம்ஸாந்யாயத்தினுல் இத்தால் சொல்லப்படுகிற அர்த்தம் வேறு ப்ரமாணங்களால் ஏற்படாத பக்ஷத்தில் விதி என்பது ஸம்பவிக்கும் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில் அநுவாதமாகயிருப்பதுதான் ஸம்பவிக்கிறது. ஒன்றினுலும் ஏற்படாத விஷயத்தில் தான் சாஸ்திரம் ப்ரயோஜனமுடையது என்றல்லவோ ந்யாயம் தெரிந்தவர்கள் சொல்லுகிருர்கள். ஆகவே வேறு உபாயங்களில் அதிகாரமில்லாதவனுக்கு அவைகளில் ஸம்பந்தமில்லையென்பதும் முன்பே ஏற்பட்டபடியினுல் அதிகாரத்தின் அநுவாதம் செய்யப்படுகிறது என்பதற்கு ஒரு விரோதமுமில்லை. அன்றேல் 'அழிவுள்ளதும் ஸுகமற்றதுமான இவவுலகத்தை யடைந்து நீ என்னை ஆச்ரயி' என்றும், 'மூவுலகிலும் போய் திரிந்து அவனையே சரணமடைந்தான்' என்றும் 'உள்ளிப்பூண்டையும் கஞ்சாவையும் தின்று சாந்த்ராயண வ்ருதம் பண்ணக்கடவன்' என்றும் இவ்வித வசநங்களில் வினையெச்சச் சொற்களினுல் சொல்லப்பட்ட

[illegible]

ஸம்ஸார ப்ராப்தி முதலியவைகளும் விதிக்கப்படுமவையாக ஆய்விடும். ஆகவே, சக்தனுக்கும் அசக்தனுக்கும் த்யாகத்தை (விட்டுவிடுவதை) விதிப்பது கூடாதாகையால், இது அதிகாரத்தையே காட்டுகிறதென்பது நீதியறிந்தவர்களின் நிர்ணயம். இதனால் (தர்ம) ஸ்வரூபத்தை விட்டுவிடவேண்டியதென்று விதிக்கிறது என்னும் பக்ஷம் அங்கீகரிக்கத்தக்கதன்று என்றதாயிற்று. ப்ரமாணங்களுக்கு விரோதமில்லாமல் விசேஷணத்தோடு சேர்த்து விதிக்கிறது என்கிற பக்ஷத்தின் ப்ரகாரபேதங்கள் பின்னால் விவரிக்கப்படப் போகின்றன.

(எல்லாத்தர்மங்களையும்,) இங்கு தர்மசப்தத்தினால் மோக்ஷோபாயமாக ஏற்படுத்தப்பட்ட பக்தியோகம் சொல்லப்படுகிறதென்பது ப்ரகரணத்தினலறியப்படுகிறது. அர்த்தம் (வஸ்து) ப்ரகரணம் முதலியவைகளுக்கு அர்த்தத்தை நிர்ணயிக்கும் தன்மையுண்டாகையால் இதுகூடும். இங்கு 'தர்மங்களை' என்னும் பன்மை, ஸத்வித்யை தஹரவித்யை முதலிய பேதத்தால் ப்ரும்ம வித்யைகள் அநேகங்களாயிருப்பதைக் காட்டுவதற்காக (உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது). 'வஸந்தன் என்கிற தேவதையைக்குறித்து கபிஞ்சலம் என்ற பக்ஷிகளைக்கொண்டு யாகம் செய்யவேண்டும்' என்கிற வாக்யத்திலேயிருப்பதைப்போல இவ்விடத்திலும் பஹுவசனம் (பன்மை) மூன்று என்கிற கணக்கிலே முடிவுபெறுகிறதோ என்கிற ஸம்சயத்தைத் தடுப்பதற்காக தர்ம சப்தத்தினால் எல்லா ப்ரும்மவித்யைகளையும் சேர்த்துச்சொல்லுவதற்காக ஸர்வ சப்தமும் விசேஷணமாக (பெயருரிச் சொல்லாக) ப்ரயோகிக்கப்படுகிறது.

[illegible]

இப்படியிருப்பதினால், இதரப்ரும்ம வித்யைகளிலொன்றிலும் அதிகாரமின்மையே ப்ரபத்திக்கு அதிகாரம் என்று சொல்லிற்றாயிற்று. ப்ரபத்தியில் விச்வாஸமில்லாதவர்களுக்கு பக்தியோகத்தில் அதிகாரமென்று யாதொன்று சிலரால் சொல்லப்பட்டதோ, அது ஸரியல்ல; ப்ரபத்தி சாஸ்த்ர உபதேசகர்களாய் பக்திக்கு அதிகாரிகளாயிருக்கும் வ்யாஸாதிகளுக்கு ப்ரபத்தியில் விச்வாஸமின்மை இல்லையாகையால், இப்படி இல்லாவிட்டால் அவர்கள் வாக்யங்களை ப்ரமாணமாக்கிக்கொண்டு நம்மால் ப்ரபத்தி அநுஷ்டிக்கப்படுகிறதெப்படிக்கூடும்? 'மனுஷ்யனுடைய புத்தியின் பலயீனத்தால் வேறு உபாயம் தேடப்படுகிறது' என்றது அசக்தர்களான ப்ரபந்நாதிகாரிகளிலேயே துர்ப்பலபுத்தியையுடைய சிலர்க்கு பக்தியில் ஆசை ஒழியும் பொருட்டுச் சொல்லப்பட்ட நிந்தாவசநமானதால் அதில் ஒரு தோஷமுமில்லை. ஆகையால் ஸ்வயமே சக்தர்களான வ்யாஸாதிகள் பக்தியை யநுஷ்டிக்கிறார்கள். அசக்தர்களான நம்மை ப்ரபத்தியை யநுஷ்டிக்கும்படி செய்கிறார்கள் என்றர்த்தமாயிற்று.

(முழுவதும் விட்டுவிட்டு) என்ற த்யாக சப்தத்தினால் வேறு வித்யைகளில் அதிகாரமின்மையே காட்டப்படுகிறது; சக்தனுக்கும் அசக்தனுக்கும் த்யாகத்தை (விட்டுவிடுவதை) விதிப்பது கூடாதாகையால்; என்று சொல்லப்பட்டது. இதில் பரி என்னும் உபஸர்க்கம் பக்தியோகத்துக்கு அங்கங்களான கர்மயோக ஜ்ஞாநயோகங்களிலும் அதிகாரமின்மையைக் காட்டுகிறது. ஆகை

186724

பரித்யாகப்ரஸங்க: । த்ரிவிதம் ஹி கர்மாநுஷ்டாநம், ஸ்வர்காத்யர்த்தம் ப்ரஹ்மவித்யாநிஷ்பத்த்யர்த்தம் நித்யநைமித்திகாத்மகம் சேதி । உக்தம் ச ஸூத்ரகாரேண, 'விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி', 'ஸஹகாரித்வேந ச' இதி । தத்ர யதா மோக்ஷாதிகாரிணாம் பக்தியோகநிஷ்டாநாம் அநுஷ்டீயமாநேஷ்வபி கர்மஸு ஸ்வர்காத்யர்த்ததா நிவர்ததே ஏவம் அகிஞ்சநாதிகாரிணாம் கைங்கர்யரூபதயா யாவச்சக்த்யநுஷ்டீயமாநேஷு நித்யநைமித்திகாதிகர்மஸு 'ஸஹகாரித்வேந ச' இதி ஸூத்ரோக்தைவ வித்யாங்கத்வம் நிவர்ததே । 'விஹிதத்வாத்' இதி ஸூத்ரோக்த ஆஶ்ரமதர்மத்வம் அபி கதாசந ந நிவர்ததே ஏவ । அயம் து விஶேஷ: — ப்ரபந்நாதிகாரிபிரநுஷ்டீயமாநாநி கர்மாணி பகவதாஜ்ஞாரூபதயா கேவலம் ஸ்வயம் ப்ரயோஜநதயாநுஷ்டீயந்த இதி । தேஷாமவஶ்யாநுஷ்டேயத்வம் । 'மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத்' இதி ஸித்தம் ॥

யால் வர்ணாச்ரம தர்மங்களை விடுவது என்னும் ப்ரஸங்கமேயில்லை. ஸ்வர்க்காதிகளுக்காகவென்றும் ப்ரும்மவித்யையை ஸாதிப்பதற்காகவென்றும், நித்ய நைமித்திகங்களானவையென்றும்கர்மாநுஷ்டானம்மூன்று ப்ரகாரங்களல்லவா? ஸூத்ரகாரராலும் 'விஹிதங்களாகையால் வர்ணாச்ரமகர்மங்களும் (அவச்யம் செய்யப்படவேண்டியவை)' என்றும் '(உபாஸநத்துக்கு) உதவியாயிருக்கும் ஆகாரத்தினாலும் (அவச்யம் அநுஷ்டிக்கப்படவேண்டியவை)' என்றும் சொல்லப்பட்டது. அங்கு முமுக்ஷுக்களாகிய பக்தியோக நிஷ்டர்களுக்குத் தாங்கள் அநுஷ்டிக்கும் கர்மங்களில் ஸ்வர்க்கம் முதலியவற்றுக்காக (ச்செய்வது) என்பது எப்படி ஒழிந்துவிடுகின்றதோ அப்படி அகிஞ்சநாதிகாரிகளுக்கு (கைம்முதல் என்றுமில்லாத ப்ரபந்நாதிகாரிகளுக்கு) அவர்கள் கைங்கர்யரூபமாகச் சக்திக்குத் தக்கபடி செய்யும் நித்யநைமித்திகாதி கர்மங்களில் 'உதவியாயிருக்கும் ஆகாரத்தினால்' என்றபடி ப்ராப்தமான வித்யாங்கத்வம் (பக்திக்கு அங்கமாயிருத்தல்) ஒழிந்துவிடுகிறது. 'விஹிதங்களாகையால்' என்ற ஸூத்ரத்தினால் ஏற்பட்ட ஆச்ரம தர்மத்வமோவென்றால் ஒருக்காலும் ஒழிகிறதில்லை. இதில் இந்த விசேஷமிருக்கிறது. ப்ரபந்நாதிகாரிகளால் அநுஷ்டிக்கப்படும் கர்மங்கள் கேவலம் பகவதாஜ்ஞாரூபங்களாகையால் அவை ஸ்வயம் (அவற்றைச்செய்வதே) ப்ரயோஜநமாகச் செய்யப்படுகின்றன என்பதே. அவை அவச்யம் அநுஷ்டிக்கப்படவேண்டுமென்பது; 'புத்தியையுடையவன் மனதினாற்கூட வைதிகாசாரத்தை அதிலங்கனம் (தவறுவது) பண்ணக்கூடாது' என்றதினால் ஸித்தம்.

(1) அதவா, தர்மஶப்தேநைவ கர்மயோகாதேரபி நிவ்ருத்தத்வாத் 'பரித்யஜ்ய' இத்யத்ர பரிஶப்த: உபாயாந்தரேஷு நைராஶ்யம் த்யோதயதி । அநாகதாநந்தகாலஸமீக்ஷயாபி அத்ருஷ்டஸந்தாரோபாயத்வரூபம் ஆகிஞ்சந்யம் உக்தம் பவதி । அதோऽயம் அதிகாராநுவாத இதி வ்யாசக்யு: ॥

(2) அதவா, நைரபேக்ஷ்யவிஶிஷ்டாய உபாயோ விதீயதே । ததாஹி ஸத்வித்யாதீநாம் கர்மயோகாத்யங்கத்வதர்ஶநாத் ந்யாஸவித்யாயா அபி ப்ரஹ்மவித்யாத்வாத் தத்ராபி கர்மயோகாத்யங்காபேக்ஷாஶங்கிநம் ப்ரதி நைரபேக்ஷ்யவிஶிஷ்டம் ஶரணவரணம் விதீயதே ॥

(3) யத்வா உபாயாந்தராஶக்தஸ்ய அதிகாரிண: ஸ்வாதிகாரபுரஸ்ஸரகார்பண்யவிஶிஷ்டம் உபாயாந்தரம் விதீயத இதி விஶிஷ்டவிதிரவிருத்த: ॥

---

(1)அல்லது தர்ம சப்தத்தினாலேயே கர்மயோகாதிகளுடையவும் விலக்குதல் ஸித்தித்துவிட்டபடியால், 'பரித்யஜ்ய' என்பதிலுள்ள 'பரி' என்னும் உபஸர்க்கம் வேறு உபாயங்களில் ஆசையின்மையை விளக்குகின்றது. 'இனிவரப்போகிற அநந்தகாலத்தை நினைத்துப்பார்த்தாலுங்கூட ஸம்ஸாரத்தைத்தாண்டுவதற்குஉபாயத்தைக்காணமலிருக்கையாகிற ஆகிஞ்சின்யம்(போக்கற்றிருத்தல்) சொல்லப்பட்டதாகிறது. ஆகையால் இது(வேறு உபாயத்தில்) அதிகாரமற்றிருக்கும் நிலையை அநுவதிக்கிறது (சொல்லிக்காட்டுகிறது) என்று இதற்கு முதல் அர்த்தம்.

(2) அல்லது, நைரபேக்ஷ்யத்தோடு கூடிய (மற்றொருகூட்டை எதிர்பாராத) இந்த உபாயம், விதிக்கப்படுகிறது (என்றுபொருள்). எப்படியென்றால், ஸ்தவித்யை முதலியவர்களுக்குக் கர்மயோகாதிகள் அங்கங்களாக விதிக்கப்படுவது காணப்படுவதாலும், ந்யாஸவித்யையும் ப்ரும்மவித்யைகளிற் சேர்ந்ததாகையாலும், ந்யாஸ வித்யையிலும் கர்மயோகம் முதலிய அங்கங்கள் வேண்டுமோ என்று ஸந்தேஹிப்பவனைக்குறித்து அவற்றின் நைரபேக்ஷ்யத்தோடு (எதிர்பாராமையோடு) கூடிய சரணவரணம் விதிக்கப்படுகிறது—என்று.

(3) அன்றியும், வேறு உபாயங்களில் சக்தியற்ற அதிகாரிக்கே தன்னுடைய அதிகாரத்தை முன்னிடுவதாகிற கார்ப்பண்யத்தோடு கூடிய வேறொரு உபாயம் விதிக்கப்படுகிறது, என்ற விசிஷ்டவிதி என்பது விரோதமில்லாதது.

॥ ஸ்ரீ: ॥

வித்வது ந்யாஸங்கள்.

ஸ்ரீ. உ. வெ. ராகவய்யங்கார்ஸ்வாமி செய்த த்ரவ்யஸஹாயத்தினல், நமது ஸபையின் சார்பாக ஸ்ரீ. உ. வெ. இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமி நாமக்கல், கரூர் தாலூக்காக்களில் அனேக க்ஷேத்ரங்களுக்கெழுந்தருளிச் செய்த உபந்யாஸங்களை வேலூர் பிராசுதாரர் ஸ்ரீ. உ. கேடி. பார்த்தஸாரதி அய்யங்கார் ஸங்க்ரஹித்து எழுதி அனுப்பியிருக்கிறார். அவை இதோடு ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்வாமிக்கு இவ்விஷயத்திலுள்ள ஊக்கமும் அபிமானமும் தீபிகை அபிமானிகளுக்கு நன்றாய்த் தெரிந்தவை.

ர. ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார். கார்யதர்சி.

1. வேலூர் 17-10-22 செவ்வாய், மாலை 4 - மணிமுதல் 6 - மணிவரையில்.

வைராக்யம்.

பகவத் ப்ரார்த்தனை முதலிய க்ரமங்கள் நடந்தபின், 'வேதாந்த தீபிகா மூலமாயும் மற்றும் பலபடிகளாலும், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, சுமார் 12 - வருஷங்களாக வேலைசெய்து வருவது உங்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். தாராளமான மனஸ்ஸுள்ள சில மகான்கள் இதன் அபிவிருத்தியில் தங்கள் த்ரவ்யத்தைச் செலவழித்து, அனேக உத்தமமான கைங்கர்யங்களை நடத்திக்கொண்டு வருகின்றனர். இந்த வருஷத்திலும், இந்த ஸ்ரீ. உப. இராகவையங்கார் ஸ்வாமி, த்ரவியத்தை சபையில் கட்டி, என்னையே வரும்படி ப்ரார்த்திக்க, சபையோர்களுடைய நியமனத்தையும், பாகவதர்களின் அபேக்ஷையையும் நிராகரிக்க அசக்தனானேன். சென்ற ஆவணி மாதத்திலேயே வரமுடியாமல் விளம்பித்து, ஏதோ சரண்யன், இந்த சமயத்தில் நேரும்படி ஸங்கல்பித்தான். இது விஷயத்தில் அடியேனுடைய க்ருதஜ்ஞதையை மேல்கண்ட சபையோருக்கும் அந்த ஸ்வாமிக்கும் தெரியப்படுத்தினேன். க்ஷமிக்கவேணும்' என்று சொல்லிவிட்டு ஆரம்பித்த உபந்யாஸம்:—வைராக்யம் என்றால் ஒழிவு. அது எந்த மதஸ்தருக்கும் பொதுவானது. நம் மனஸாகிற துஷ்டாஸ்வம் இந்திரியங்கள் போகும் மார்க்கங்களிலெல்லாம் சுத்தித்திரிந்து சரியான மார்க்கம் சேராமல், நம்மையிக்க ஆபாஸத்திற்கு ஆளாக்கிவிடும். அதற்கு இந்த வைராக்யம் தான் முக்கியமான மருந்து. ஜீவாத்மா, இந்த ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்திலிருந்து கரையேற இந்தவைராக்யத்தைத் தவிர வேறே உபாயமில்லை. முதலில் 'ஆஹார

[illegible] ஸத்வ ஸுத்தி:' அதாவது ஆஹாரம் சுத்தியாக இருந்தால் அந்தக்கரணம் சுத்தமாயிருக்கும், என்று சாஸ்திரம். சுத்தி பல நியமங்களுண்டு. நாக்கு பூர்வத்தில் தின்று ருசி யறிந்துள்ள வாஸனுபலத்தினல் சாஸ்திர நிஷித்த பதார்த்தங்களில் ஆசை தோன்றும்போது இந்த வைராக்யத்தாலேயே அதை ஜயிக்க வேண்டும். அப்படிக்கின்றி, இன்று ஒருதடவைதானே என்று இடம் கொடுத்தால் இழுத்துக்கொண்டே போய்விடும். இப்படியே கர்மேந்திரிய ஜ்ஞானேந்திரிய வ்யாபாரங்களிலும் மனதை இழுத்து, ப்ரபன்னமார்க்கத்தில் சேரவொட்டாமல், செய்துவிடு மச்சமயத்தில், இந்தவைராக்யம் ஒன்றே அவைகளைத் தடுக்கமுடியும். கேவல லௌகிகர்கள் கூட இந்த வைராக்யத்தை ஒருமாதிரி தங்களுக்கனுகூலமுள்ள விடங்களில் உபயோகப்படுத்தி வருகிறார்கள். நாம் அப்படிக்கின்றி சாஸ்திரம் விதித்தபடியான கர்மானுஷ்டானங்களைச் செய்வதில் தீர்க்கமான வைராக்யமும், மற்ற அசாஸ்திர விஷயங்களில் எதுவும் செய்வதில்லை என்கிற அதேமாதிரி வைராக்யமும் செய்து வரவேணு மென்பதே நம்ம வைதீகர்களின்மதம்' என்றும் பல உபகதைகளாலும் ஸ்ருதீதிஹாஸங்களாலும், திருவாய்மொழி பிரபந்தங்களாலும் விளக்கி மிகவும் ரமணீயகமாய் உபந்யாஸம் முடிவடைந்தது.

2. வேலூர், 19-10-22, வியாழன், மாலை 4 - மணி முதல் 6½ - மணிவரையில்.

பிரஹ்லாத பக்தியும் ஆழ்வாரும்.

'நம்மசாஸ்திரத்தில் மோக்ஷோபாயமாகச்சொல்லி அனுஷ்டிக்கும்படி வற்புறுத்தியிருத்தல் பற்றிப் பக்தியும், பிரபத்தியுமே உபாயங்கள். அவைகளில் பக்தி மார்க்கத்தில் சென்று சிறப்புவாய்ந்தவரான பிரஹ்லாதாழ்வாரைப் பற்றியும், பிரபத்தி மார்க்கத்தைச் செழிக்கவைப்பதற்கே அவதரித்தவரான பரமகாருணிகரான நம்மாழ்வாரைப்பற்றியும் அவர்கள் முக்ததசையடைந்த பிறகு இருந்த நிலை என்னவென்பதைக் கவனிப்பதே இன்றைய முக்கியாம்சம்.

பிரஹ்லாதன் 'ஸர்வம்ஹரிமயம் ஜகத்' என்கிற நியாயத்தினல் ஸர்வவிதத்திலும் அவனிடமே புத்தியைச்செலுத்தி அந்த வானந்தத்தை அனுபவித்துக்கொண்டு இருந்தமையால், தன் சரீரத்திற்கு செய்த தீங்கு எதுவும் தன்னைபாதிக்கவில்லை. ஒரு சமயம் ப்ரஹ்லாதனைக்கேட்ட ஹிரண்யனுக்குத் தான்கற்றதில் முக்கியமானது 'ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:' என்று துடங்கி பக்தியுபதேசம்செய்தார். அதேமாதிரி ஆழ்வாரும் பக்தியிலீடுபடும்படி பலதடவைகளி லுபதேசித்திருக்கிறார். 'நிஸ்ய கலாணி [illegible] [illegible] வீர்யாணி [illegible] [illegible] க்ருதாநி । [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நிர்த்ருதி:' பிரஹ்லாதன்

பகவத்குணங்கள் யாராகிலும் சொல்லக்கேட்ட உடன் மிக்க ஸந்தோஷத்துடன் புளகாங்கிதனாய் உரக்கப் பாடிக்கொண்டு சப்தம் செய்து நர்த்தனம் செய்வன்: என்று பொருள்- இதே தசையில் ஆழ்வாரும் 'செல்வநாரணனென்ற சொல் கேட்டலும், பல்கும் கண்பனி நாடுவன் மாயமே' என்றபாட்டினாலும், அதேமாதிரியான தன்மையை அனுபவித்து 'அல்லுநன்பகலுமிடை வீடின்றி, நல்கி என்னை விடான் நம்பி நம்பியே.' ஒரே மாதிரியானவனுபவம்—ப்ரஹ்லாதன் ஓரிடத்தில் 'யதா ஹ்ய ஹ தூஷ ஜவக்ஷ அியுஷதூ்ர க்ஷூஂஷெதெ யூ்யதி வஂஷெதெ ஐநஂ। ஃாஹஂஶஸந வக்ஷிஹொ ஜஹஷெதெ நாராயணெ த்ூாது ஶதிரஃதத்ருவஃ॥' இந்த அவஸ்தையை அனுபவித்தது ஆழ்வார் 'அழுவன் தொழுவனாடிக் காண்பன் பாடியலற்றுவன், தழுவன் வினையால் பக்கம் நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்' என்று. ப்ரஹலாதனை சிக்ஷிப்பதற்காகப் பெரியதீயின் நடுவிலிட்ட ஸமயத்தில், அவ்வெப்பம் தாங்க மாட்டாமல் சகல ஜனங்களு மகன்று நிற்க, ஹிரண்யனும் அவ்வுஷ்ணம் சகிக்காது தூர விலக அச்சமயம் ப்ரஹ்லாதன் 'நஹ்ஷூ்யதஂ' என்கிற ச்லோகத்தினால் தான் தாமரைப் புஷ்பத்தின் நீரிலிருப்பதுபோல் மிக்கசுகமாகவிருக்கிறேனே; இதன் காரணம் அந்த அச்சுதனின் மஹிமையேதவிரத் தான் மந்திரம் கற்றுக்கொள்ளவுமில்லை மாயமுமில்லை என்றும், இது சகல பக்தஜனங்களுக்கும் வரக்கூடிய நிலைமை என்பதையும் எடுத்துக்காட்டினான். அதே மாதிரி ஆழ்வாரும் 'எறியும் செந்தீயைத்தழுவி யச்சுதனென்னும் மெய்வேவாள், எறியும் தண் காற்றைத்தழுவி யென்னுடைக் கோவிந்தனென்னும்,' என்றிப்படி அந்தரங்க பகவன்னுமாக்கள் கூட வன்றோ அவ்வீடுபாட்டிற்கொன்றுயமைந்திருக்கின்றன' என்றிப்படி அனேக இடங்களில் பாகவதம் விஷ்ணுபுராணங்களிலிருந்தும், அதற்கு மிக்க ஒற்றுமையான பல திருவாய்மொழிப் பாசுரங்களையும் எடுத்து ஒவ்வொன்றிலுமிருக்கும் வாசிகளைச் சீர்தூக்கிப்பலரும் எளிதிலறியும்படி, சுலபமான வசனநடையில், கேட்டோர் களிக்க, அம்ருதமயமாய்ப் பொழிந்தார்.

3. நாமக்கல், 22. 10. 22, ஞாயர், மாலை $6\frac{1}{2}$-மணிமுதல் $9\frac{1}{2}$-மணிவரையில்

நிர்வேதம்.

நிர்வேதப்படுதல் மிக்க அவச்யம்என்று வேதத்திலும் பல இடங்களில் வற்புறுத்திச் சொல்லப்பட் டிருக்கின்றது. நிர்வேதம் என்னும் பதத்திற்கு நெஞ்சாரல் படுதல் என்றர்த்தம். இப்படி அநுதாபப் படுவது பலவிஷயங்களிலும் நேரலாம் - ஐஹிகத்திற்காகவும், ஆமுஷ்மிகத்திற்காகவும் ஸம்பவிக்கும். ஸ்வக்ருத புண்யபாபங்களிலும், தேஹேந்திரியாதிகளிலும் ஸரபாலாபங்களிலும் இதுஉண்டாகலாம். பரலோக ஸுகமான மோக்ஷப்ராப்தியில்

இந்நிர்வேதம் உண்டாகுமேயானால் அதுதான் ஶாஸ்திரியமானது. அதைத் தவிர மற்றிதரவிஷயமான நிர்வேதம் அசாஸ்திரமும் பாபாஸ்பதமும் பயனற்றது மாகிறது.

"பக்தர்கள் தங்கள் பக்தியின் பரிபாகத்திற்குத் தக்கபடி இதை அநுபவித்து வந்திருக்கிறார்கள். ஒருவன்தினம் துயிலெழுந்ததும் 'வூ்யஃஂ வீக்ஷூ் ஹதஂ வயஃ' என்று பரலோகமடைய ஒருவித ப்ரயத்னமும் செய்யாமல் நாள்கள் வயதை அபகரித்தனவே என்று நெஞ்சாரலாவது அடையும்படி ஸ்மிருதிகள் விதித்தன. 'நிவெஃடி ஶூஶாவாஶாநாஂ வஃஶாஷஸூ் யஶாஹூ்வஸிஃ' (இதுமனிதர்களின் அசாபாசங்களுக்கு கூர்மையானகத்தி போன்றது) என்று பக்தர்கள் கொண்டாடி யிருக்கிறார்கள் - அவந்தீ நகர வாஸியான ஒரு பிராம்மணன் தனிகனாயிருந்து மிக்க தரித்திரனானவுடன் தான் ஒருவித ஸத்கர்மங்களையும் செய்யவில்லையே யென்றும், தனம் தான் க்ஷேமஸுகத்திற்கு இடையூறென்றும் செவ்வனே தெரிந்து ஸம்ஸாரஸாகரத்திலிருந்து கரையேற இந்த நிர்வெதமே தகுந்த தெப்பம் என்றும், அதுவும்பகவத்கடாக்ஷமில்லாதவனுக் குண்டாகாதென்றும் சொல்லுகிறார் 'நூநஂவெஹ ஹவாஂ ஷூஷஃ ஸவஃ ஜெவஃயொஹஸிஃ। யெந நீதொ ஶா ஶாஂ நிவெஃடி ஶூதூநஃ ஶூவஃ' என்று - ஆழ்வாரும் நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலே னாகிலு மினி உன்னை விட்டு ஒன்றும், ஆற்றகிற்கின்றிலே னரவினணையம்மானே! என்று உன்னைவிட என்னால் முடியாது' என்று நெஞ்சாரல் படுகிறார் -

"விதேஹ ராஜ்யத்தில் பிங்களைஎன்னும் ஒருவேசி தன்னிஷ்டப்பட்ட தனம் வரவேண்டியபடி வராத ஒருதினத்தில், தன் தொழிலின் துஷ்டத்தன்மையை எண்ணி ஒழிவடைந்து 'நூநஂ வெஹஹவாநூ ஷீ்தஃ விஷூஃ கெநாவி கஃஃணா। நிவெஃதொயஂ ஶாஶாயா யதூ ஜாத ஸூஃவாவஹஃ' பகவான் இதுவரை இப்படிப்பட்ட நிர்வேதத்தைக் கொடுக்கவில்லையல்லவா? இந்த பாக்ய ஹீனையான எனக்குஅவர் எப்படி கிருபைசெய்வார் என்று நெஞ்சாரல்பட்டு நல்வழிப்பட்டதாக பாகவதம் கதை கூறுகின்றது. ஆழ்வாரும் 'ஈவிலாத தீவினைகளெத்தனை செய்தனன் கொல், தாவி வையம் கொண்ட வெந்தாய் தாமோதரா' வென்று, ஆர்த்தி யடைந்திருக்கிறார்.

"ராமாயணத்தில், 'ராக்ஷஸாநாஂ வயஂக்ஷா ஸஃஷயிக்ஷா ச ராவணஂ। ஶஂகா ஃநூஃவிதாஂ க்ஷூக்ஷா கஷா ஷூக்ஷூ்தி ஃாஂ வதிஃ' என்று ராக்ஷஸர்களை வதம் செய்து, ராவணனைக் கொன்று, எனக் கெப்போது ஸேவை ஸாதிப்பாரோ என்று ஸீதாப்பிராட்டி எதிர்பார்த்தபடியான ஒருநிர்வேதத்தை

ஆழ்வார் 'சீலமில்லாச் சிறியேனேலும் செய்வினையோபெரிதால், ஞாலமுண்டாய் ஞானமூர்த்தி நாராயணா 'வென்று சொன்னார்

அசோகவனிகையில்ஸீதாப்பிராட்டி, 'ஸாஜீவிதம்க்ஷிப்ரமஹம் த்யஜேயம் விஷேண ஸஸ்த்ரேண ஸிதேந வாபி। விஷஸ்யதாதா நஹி மேஸ்தி கஸ்சித் ஸஸ்த்ரஸ்ய வா வேஸ்மநி ராக்ஷஸஸ்ய' ஐயா! இந்த ராக்ஷஸன் வீட்டில் நமக்கு பிராணனை மாய்த்துக்கொள்ள பரமோபகாரம் செய்யக்கூடிய விஷத்தையாவது கூர்மையான ஒரு ஆயுதத்தையாவது கொடுத்துதவும் அந்தரங்க மித்ரர்கள் யாருமில்லையே, யென்று சோகப்பட்டது, ஒரு நிர்வேதம். ஆழ்வார் 'இடகிலே னொன்றட்ட கில்லேன் ஐம்புலன் வெல்ல கில்லேன், கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித் தேத்த கில்லேன்' என்று ஒரு கைங்கர்யமும் செய்யவில்லையே என்று மனம் நெகிழ்ந்தது ஒன்று—

பரதாழ்வான் 'நஜேஸாம் திஸவிஷ்ருதி' என்று பலபலபடிகளிலும் மனம் நைந்துருகியதை ஆயோத்யாகாண்டத்தில் விஸ்தாரமாய்க்காணலாம். ஆழ்வாரும் 'முன்னீர் ஞாலம் படைத்த வெம் முகில்வண்ணனே' அந்நாள் நீ தந்த வாக்கையின் படி யுழல்வேன் வெந்நாள் நோய்வீய வினைகளை வேரறப் பாய்ந்து' எந்நாள் யானுன்னை யினி வந்து கூடுவனே' என்றுழந்து கரைந்துருகியதும் ஒரு நிர்வேதம். இப்படி நிர்வேதம் பலவிதத்திலும் அவரவர்க ளனுபவிக்கும் ரீதிக்குத் தக்கபடி அதன் விஷயங்கள் அமையும். நம்போன்றவர்களுக்கு இப்படி நிர்வேதங்கூட உண்டாகாம லிருக்கிறதே என்கிற நெஞ்சாரலும் ஒரு நிர்வேதம். இதையும் புராணங்கள் அப்படியே உதாஹரிக்கின்றன' என்று வெகு விஸ்தாரமாய் கேட்போர் பரமானந்தமடையும் வண்ணம் அழகாய் உபந்யாஸம் நடந்தது.

4 - நாமக்கல் 23-10-22 திங்கள் மாலை 6 - மணி முதல் $9\frac{1}{2}$ - மணி வரையில்.

அர்ச்சாவதார வைபவம்.

'இன்றையதினம் எடுத்துக்கொண்ட 'அர்ச்சாவதாரவைபவம்' பரலோகம் உண்டென்றும் ஈச்வரனையும், வேதசாஸ்திர ப்ரமாணங்களையும் ஒப்புக்கொண்டவனுமான ஆஸ்திகனுக்கு மாத்திரம் உபயோகப்படும். ஆனால் அப்படி விரோதமான கொள்கைகளுள்ள நாஸ்திகர்கள் இப்போது இல்லையாதலால் சர்வஜனங்களுக்கும் இது முக்கியமான விஷயம் என்பதில் ஆக்ஷேபனையில்லை. இந்த ஸித்தாந்தத்தில் துவைத, அத்வைத, விசிஷ்டாத்வைத மதஸ்தர்களுக்குள் யாதொரு பேதமும் கிடையாது. ஆனதால் இவ்விஷயம் ஸர்வ ஸம்மதமானது.

'எந்த வேதவாக்யங்கள் பகவானை ஸித்தாந்தப்படுத்துகின்றனவோ அதேமாதிரி அவை அவன் ஸ்தானங்களையும் ஸித்தாந்தம் செய்கின்றன அத்வைத ஸித்தாந்தத்திலும் 'ப்ரஹ்மம்' என்னும் நிர்க்குணம் ப்ரும்மம் நீங்கலாக மற்ற இடங்களில் பூர்ணமாய் இவ்விஷயத்தை ஒப்புக்கொண்டு அநுஷ்டானத்திலும் வருகிறது. ஸகுணப்ரும்மம் என்றதிலிருந்து மூன்று மதத்திற்கும் ஸாம்யம். நாமும் அங்கிருந்தே துடங்குவோம். ஸாக்ஷாத் பகவான் பர, வ்யூக, விபவ, அர்ச்சா, அந்தர்யாமி என்று 5-ரூபங்களாகவிருக்கிறான் என்றும் அதனதன் ஸ்தானங்களுமப்படியே வேறு என்றும் வேதப்பிரமாணமே சொல்லுகின்றது. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீயஃபதியான பரவாஸுதேவன், கைவல்யத்தில், வ்யூகம், என்கிற ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன அநிருத்த, வாஸுதேவர்கள் என்றும், நம்போன்ற சேதனர்களுக்கு இந்த இரண்டு மூர்த்தி விசேஷங்களும் ஸேவை கொடுக்கக்கூடியவையல்லவென்றும், 'விபவம்' என்ற அவதாரங்கள் ஏதோ காலாந்தங்களில் நேரக்கூடியவை ஆதலால், ராம கிருஷ்ணாத்யவதாரங்களை ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்க அந்தக்காலத்தில், அந்தத் தேசத்திலிருந்த சிலர்களுக்கு, அதிலும் அந்த அவதாரவிசேஷத்தில் மகிமை தெரியாத அஜ்ஞானிகள் நீங்க யாரோ சிலருக்கு மாத்திரம் அவரவர்களின் பக்திக்குத்தக்கபடி ஸேவை கிடைத்தது என்றும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட அவதார விசேஷங்களில்லாத இந்த சமயத்தில் நம்போன்றவர்களுக்கு 'விபவம்' என்கிற விசேஷத்தாலும் ஸாதகமில்லை. அந்தர்யாமீ - என்ற பகவத்ரூபம் யமநிய மாஸனாதி அஷ்டாங்கயோகங்களை கிரமமாய்ச் செய்து ஸித்தியடைந்த யோகீஸ்வரர்களுக்கன்றி நம்போன்றவர்களுக்குச் சுலபமாகமாட்டாது. ஆனால் அப்படிப்பட்ட பரமகாருணிகனான பகவான் நம்போன்றவர்களின் ஸேவைக்காகவே ஆராதனை செய்பவன் இஷ்டப்படியான அர்ச்சா, விக்ரஹத்தில் ஸாந்நித்யம் செய்கிறான். இந்த ஒருகாரணத்தைக் கொண்டே அந்த பகவானுடைய வாத்ஸல்யாதி குணங்கள் செவ்வனே காணப்படுகின்றன. அர்ச்சா என்றால் பிரதிமை என்று அர்த்தம். (இப்படி அர்ச்சையில் ஸாந்நித்தியம் செய்கிறான் என்கிறதற்குப் பல வேத ப்ரமாணங்கக் கூறப்பட்டன). எப்படி மந்திரத்தில் அதனதிஷ்டான தேவதா ஸாந்நித்யத்தை ஒப்புக்கொள்ளுகிறோமோ, ப்ரத்யக்ஷத்திலும் சிலவற்றைப் பார்க்கிறோமோ, அப்படியே அர்ச்சையான விக்கிரஹ விசேஷத்திலும் மந்திரத்தினால் ஆவாஹனம் செய்யப்பட்டவுடன் அந்த மந்திரத்திற் குறித்தான தேவதை ஸந்நிதியமடைகின்றது. (இதற்குப் பலபிரமாணங்கள் ஸாஸ்திரரீதியாய் சொல்லப்பட்டன) ஆனால் இதுவிஷயமாய்ச் சில ஆதுனிகர்கள் இந்துக்களுக்குக் கோயிலே கிடையாதென்றும், மனதில் தியானம் செய்வதொன்றே சரியான வழியென்றும் சொல்லிக்கொண்டிருப்பதாக கேழ்விப்படுகிறோம். அவர்களின் பூர்வபக்ஷம் - வேதப்பிரமாணமில்லை என்பதும் அத

ஞல் அது அவைதிகம் என்றும் ‘ [illegible] ’ என்றும், ‘ [illegible] ’ என்று முள்ள வேதப்பிரமாணத்தை ஆராய்ந்தால் தக்க பரிஹாரம் ஏற்படுகின்றது. ‘ [illegible] ’ என்றதினுல் பத்மனுபனுன, வ்யூஹமும், [illegible] - என்கிற பதத்தினுல், ஸூர்யமண்டல மத்யவாஸியான விபவமுனை, [illegible] - என்பதால் பரஸ்வரூபத்தையும் [illegible] - என்பதினுல் பிரஸ்தாபத்தில் சொல்லப் புகுந்த அர்ச்சையும், [illegible] - என்று அந்தர்யாமியும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. வேதவாக்யங்களை அர்த்தம்செய்வதில் பூர்வத்திற்கு விரோதமில்லாமலும், மீமாம்ஸாநியாயத்திற்கு கட்டுப்பட்டும், வேதவாக்கியங்கள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டும் அர்த்தம் செய்யவேண்டியதே ப்ராசீன மானவழி. அப்படிக்கின்றி இவைகளில் சில தான் பூர்வ வாக்யமென்றும் - சில பின்பு சேர்க்கப்பட்டன வென்றும் சில நியாயங்களை ஒப்புக்கொள்ளாமலும் அர்த்தம் செய்வதால் வந்த அனர்த்தங்கள் பல என்று ஊகிக்க வேண்டியிருக்கின்றது. வேதத்தின் அர்த்தத்தை ஒட்டி அதையே ஆதாரங்களாகவுள்ள, ஸ்மிருதி புராணங்களில்; பின்னும், பரஸ்பரம், வ்சனங்களுண்டு.

1 [illegible] ।
[illegible] ॥
என்று பரத்தையும்

2 [illegible] ॥
என்று வ்யூஹத்தையும்

3 [illegible] என்று அவதார விசேஷங்களையும்,

4 [illegible]
[illegible] என்று அந்தர்யாமியையும்

5 [illegible] ॥ ’

என்று பல வசனங்களை நிரூபித்தார்.

5.மோகனூர் 24 - 10 - 22 - செவ்வாய் - ராத்திரி 7 மணிமுதல் $9\frac{1}{2}$ மணிவரையில் -

ஆஸ்திக்யம்

“ அர்ச்சாவாதார மகிமையை அடியொத்தி முக்கியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது ஆஸ்திக்யம் என்பதைப்பற்றி சாஸ்திரங்களில் விவரித்திருக்கும் ரீதியாக சகலவர்ணத்தாருக்கும் ஸமான்யமாய் உபதேசிப்பது உசிதமாகிறது - மகர்ஷிகளும் இவ்விதமே அனுஷ்டித்து வந்ததாகப் புராண இதிஹாசங்களால் செவ்வனே விளங்குகின்றது. உதாகரணமாய், ஸ்ரீமத்ராமாயணத்தில் ‘ [illegible] ’’ என்கிறவிடத்தில் ஸாதுக்களின் தர்மத்தை அப்ரமேய குணத்தையுடைய பரதாழ்வானின் பொருட்டு கேவலம் காட்டிலேயே பழகியுள்ள குஹன், ‘ [illegible] ’ என்று தோசார்யனு மாச்சரியப்பட்டுக் கொண்டாடத்தகுந்த குணபூர்த்தியுள்ள, மாகாத்மாவென்னும் பதஅர்த்தங்கள் சகலமும் குடிகொண்ட லக்ஷ்மணப்பெருமாளின் பரமோத்தமமான ஸத்ஸாவம் அறியத்தக்கது. இந்தஇடத்திலுள்ள அனேக விசேஷார்த்தங்களையும் சாஸ்திர தத்வார்த்தங்களையும் கவனித்தால் ஸாமான்ய தர்மோபதேசங்களில் ஆசார்ய சிஷ்யக்ரமங்களில்லை என்று தெரிகிறது.

இவ்வுலகில் நாஸ்திகள், ஆஸ்திகள். என இருவகையாக ஜனஸமூகங்களைப் பிரிக்கலாம். முக்கியமாய் ‘ [illegible] ’ என்றஜ்ஞானமுள்ளவன் ஆஸ்திகன். அஃதில்லாதவன் நாஸ்திகன். நாஸ்திகனை பரமநாஸ்திகன் என்றும், அர்த்த நாஸ்திகன்என்றும், நாஸிகன் என்றும் மூன்றுவகையாய் பிரிக்கலாம்- வேதங்களையாவது, சாஸ்திர ப்ரமாணங்களையாவது ஒன்றையுமே ஒப்புக்கொள்ளாமல், தன்மனம் நிச்சயம்செய்த தொன்றையே பிரதானமாகக் கொண்டவன் பரமநாஸ்திகன். அப்படிப்பட்டவனுக்கு ஸமாதானம் சொல்வது மிகவும் கஷ்டம். பரலோகத்தையாவது, அல்லது ஏதாகிலும் ஒருபிரமாணத்தையாவது ஒப்புக்கொண்டவன் நாஸ்திகன். இவனுக்கு உசிதானுஷ்டகார்யங்களில் பச்சாத்தாபமிருக்கும். இப்படிப்பட்டவன் விஷயத்தில் சாஸ்திரார்த்தங்கள் உபயோகப்படும். ‘ [illegible] ’ [illegible] । (சரீரமிருக்கும்வரையில் கடனே உடனேசெய்து நன்ருய் நெய்யும்பாலுமாய்த் தின்னவேண்டியது. இறந்து சாம்பலானபிறகு திரும்பி எப்படி வரமுடியும்? ஆகையால் அனுபவித்தவரையிலே தான் சுகம்'); இந்தக் கக்ஷிநாஸ்திகவாதம். இவன்விஷயத்தில் இனி ஸாமான்ய நீதிநியாயங்களைக் கொண்டே [illegible]

குப்பவேண்டும். கேவலம் காட்டுமிருகங்கள் குட்டிபோட்ட உடன், அக்குட்டி, ஸ்தன்யமிருக்கு மிடத்தில் குறிப்பாய்ச்சென்று ஊட்டுகின்றது. அப்படி ஊட்டாவிட்டால், தனக்கு ஆகாரமில்லமலிறந்து போவோமென்றும், அந்தக்குறித்த இடத்தில்தான் ஊட்டவேண்டுமென்றும், தன் ஆஹாரம் அதுதான் என்றும் அதுஎப்படிக் கண்டுகொண்டது என்று ஒருகேள்வி கேட்போம். இதற்கு நாஸ்திகவாதத்தின் கீழ் சரியாய் பதில் வராது. நம்மையே அதற்குப் பதில் கேட்பான். அப்போது "ஜீவ நாத்ருஷ்டம்" என்னும் பிரமாணத்தை விவரணம் செய்தால் ஒப்புக் கொள்ளவே வேண்டிவரும். ஒரு பிரமாணத்தைத் தப்பு என்று சொல்வதானல் அதிலுள்ள பாதகம் இது என்று காட்டினலொழிய அதுதப்பு ஆகமாட்டாது.

அதேமாதிரி ஜாதிகளின் வித்யாஸத்தையும் நிரூபிக்கலாம். தைலங்கள் பலபலவிருந்தபோதிலும், சாதாரணமான பார்வைக்கு எல்லாம் ஒரே எண்ணெய் போல் தான் தோன்றும். ஆனல் அந்த விஷயந்தெரிந்தவர்கள் எப்படிக் குறியாய் அவைகளின் வித்யாஸத்தைக் கண்டுபிடிப்பார்களோ, புஷ்பராகக்கல்லுக்கும் வைரத்திற்கு முள்ள ஸூக்ஷ்ம வித்யாஸத்தைக் கூட ரத்ந பரீக்ஷகர்கள் எப்படிச் சுலபமாகக் கண்டுகொள்வார்களோ இன்று செவ்வாய்க்கிழமை தான் என்று நம்பவேண்டி வருகிறதோ, மாதுர்யம் என்பது ஒரே வார்த்தையாயிருந்தாலும் பதார்த்தங்களுக்குத் தக்கபடி ஒவ்வொன்றும் எப்படி வேறுபாடடைந்திருக்கின்றதோ, அதுபோல் வர்ணம், ஆச்ரமம் எல்லாவற்றையும் அதில் பரிசயப்பட்டவர்கள் நன்றாய் நிச்சயம் செய்யலாம். இவைகள் ஒப்புக்கொள்ளுவதில் ஏதாவது ஒரு ப்ரமாணத்தை ஒப்புக்கொள்ளவேண்டியே வருகிறது. அல்லது யுக்தி, ஆப்தவாக்யத்தையாவது ஒப்புக்கொள்ளவேண்டியதாகும். எதையாவது ஒப்புக்கொண்டு அதன் வழி சென்றால் எல்லாவற்றையுமா ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

" ஆக, அதன் வழியாய் சப்தப்ரமாணம், யுக்தி, இவைகளையும் ஒப்புக்கொள்ள வேண்டித்தான் வரும். இதில் யுக்தியேதான் ப்ரதானம் என்னப்படுமானல், அவனவன் புத்திகூர்மைக்குத்தக்கப்படி யுக்தி வளர்ந்து வந்து ஒரு இடத்திலும் நிலைநிற்காது—நிர்த்தாரணமும் செய்யமுடியாது. நிர்த்தாரண மில்லாவிடில் அந்த யுக்திவாதம் நிலை நிற்கவு மாட்டாது. ஆதலால் அதீந்திரிய விஷய நிர்த்தாரணங்களில் சாஸ்திரமே பிரமாணமாகும். அவ்வண்ணம் சாஸ்திரத்தை ஒப்புக்கொண்டால் வேதங்களையும், ஸ்மிருதி, இதிஹாஸ, புராணங்கள் சகலத்தையும் ஒப்புக்கொள்ளும்படி நேரிடுகிறது. அவைகளிலிருந்து இது தகும், இது தகாது, என்பதையும் நம்பத்தான்வேண்டும். கடைசியாக" 'ஆதத்வண்ணம் ஏபோ ஸ்ருஷ்டம் முணகர்ம விபாகசஃ' என்றபடி நான்குவர்ணங்கள், ஆச்ரமங்கள், அதனதன் காரியங்கள் முதலிய சகலமும்

சேர்ந்து விடுகின்றன. பிறகு செய்யத்தகாத காரியங்கள் செய்தால் பாபம் என்றும் அதன் பலன்கள் நரகாதியனுபவங்கள் என்றும், செய்யும்படி சொன்ன காரியங்களைச் செய்து வருவதால், புண்யம்வரும் என்றும் அதன் பலமான ஸ்வர்க்காதிஸுகங்கள் என்றும், நிர்ணயிக்கவுமே நேரிடும். 'வாசிகை: பக்ஷிம்ருகதாம் யாதி மானஸைரந்த்யஜாதிதாம் । சரீரஜை: கர்மதோஷைர்யாதி ஸ்தாவரதாம் நர:' என்கிற பிரமாணத்தால் வாக்கால் செய்யும் பாபத்தால் பக்ஷி, மிருகங்களாகவும், மனஸ்ஸினல் செய்த பாபத்தால் அந்த்ய ஜாதியாகவும், காயத்தால்செய்த பாபத்தினல் மரமாகவும், மனிதன் ஆகிறான் என்று சகல விஷயங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டி வருகிறது. பின்புறம் ஆசார்யன் தேசிகன் சொன்னதுபோல் " மறையுறைத்த பொருளெல்லாம் மெய்யென்றோர்வராய்ப் பூர்ணமான ஆஸ்திகத் தன்மை வந்து விடும்.

" வேதசாஸ்திர புராணதிகளில் சிலவற்றை ஒப்புக்கொண்டும், சிலவற்றை நம்பாமலு மிருப்பவர்கள்தான் 'ப்ரச்சந்நநாஸ்திகர்' என்று நம்பூர்வாசார்யர்கள் பிரித்திருக்கின்றார்கள், இப்படி சகலஜனங்களு மிவ்வரிய விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து ஆனந்தமடையும் வண்ணம் உபன்யாஸம் நடைபெற்றது.

(இன்னும் வரும்.)

வேலூர், கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார்.

எண்ணாயிரம் கிராமத்தின் ஓர் சிலாசாஸநம்.

தென் ஆற்காடு ஜில்லாவில் விழுப்புரம் தாலுகாவில் எண்ணாயிரம் என்னும் கிராமத்தில் அழகிய நரஸிம்மப்பெருமாள் ஸந்நிதி ஒன்று உண்டு. அதின் கர்பகருஹத்தின் வடவண்டைச்சுவரில் சோழமண்டலச் சக்ரவர்த்தியான ம-ா-ா-ஸ்ரீ ராஜேந்திர சோழதேவருடைய உத்திரவின்பேரில் அளிக்கப்பட்ட ஒரு சிலாசாஸநமிருக்கிறது. கோவிலில் தூபதீபநைவேத்யத்துக்கும், உத்ஸவங்கள் நடத்துவதற்கும், கோவிலில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலையின் சிலவுக்காகவும் மான்யம் விடப்பட்டிருக்கிறது இந்த மான்யத்தில்,

1. ஸந்நிதியில் திருவாய்மொழி பிரதிதினம் ஸேவிப்பதற்கு நாலுஸ்வாமிகளை நியமித்து அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு முக்குருணி நெல் வீதம் கொடுக்கும் படிக்கும்,

2. கோவிலைச்சேர்ந்த மடத்தில் 25-ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பிரதிதினம் ததீயாராதனம் செய்விக்கும் படிக்கும்,

3. ஆனிமீ அனுஷத்தில் ஏழுநாள் உத்ஸவத்தில் ஒரு ஆயிரம் ஸேவார்த்தம் வந்த வைஷ்ணவர்களுக்கும் தாஸர்களுக்கும் அன்னம் அளிக்கும் பொருட்டும்,

4. ரதோத்ஸவம் செய்வதற்கும், அதற்கு வேண்டிய சேலை முதலியது வாங்குவதற்கும், அந்த உத்ஸவ ஸமயத்தில் பரதேசிகளுக்கு வஸ்த்ரதானம் செய்யும் பொருட்டும்,

இத்துடன் பாடசாலையில் வேதம், வியாகரணம், மீமாம்ஸை, வேதாந்த பாடங்கள் நடத்திவருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த தர்மத்தினல் பாட

சாலையும் அதில் படிக்கும் பிள்ளைகளுக்கு அன்னசாலை(Hostel)யும் பரிபாலிக்கப்பட்டு வந்தன. அதில் 75-பேர்கள் ருக் வேதத்தையும், 75-பேர்கள் யஜுர் வேதத்தையும், 20-பேர்கள் சந்தோக ஸாமவேதத்தையும், 20-பேர்கள் தலவகார ஸாமவேதத்தையும், 20-பேர்கள் வாஜஸநேய சாகையையும், 10-பேர்கள் அதர்வ வேதத்தையும், 10-பேர்கள் போதாயன க்ருஹ்யகல்பத்தையும், காடகத்தையும், 25-பேர்கள் வ்யாகரணத்தையும், 35-பேர்கள் ப்ராபாகர மீமாம்ஸையையும், 10-பேர்கள் வேதாந்தத்தையும் அத்யயனம் செய்து வந்தார்கள். வேதாப்யாஸம் செய்துவந்த பிள்ளைகள் 230, வ்யாகரணத்தில் ரூபாவதாரம் என்னும் க்ரந்தத்தை அப்யஸித்து வந்தவர்கள் 40 வ்யாகரணம், வேதாந்தம் மீமாம்ஸை இதுகளை அத்தியயனம் செய்து வந்தவர்கள் 70, ஆகமொத்தம் படித்துக்கொண்டிருந்த பிள்ளைகள் 340.

இவர்களை படிப்பிக்கும் பொருட்டு பதிமூன்று உபாத்தியாயர்களிருந்ததாகத்தெரியவருகிறது. ருக் வேதத்துக்கு 3-பேர்கள், யஜுர் வேதத்துக்கு 3-பேர்கள், சந்தோகஸாமத்துக்கு ஒருவர், தலவகார ஸாமத்துக்கு ஒருவர், வாஜஸநேய சாகைக்கு ஒருவர், போதாயன க்ருஹ்ய கல்பம், இதுகளுக்கு [ஒருவர், வ்யாகரணத்துக்கு ஒருவர், மீமாம்ஸைக்கு ஒருவர், வேதாந்தத்துக்கு ஒருவர், ஆக பதிமூன்று உபாத்யாயர்கள் நியமிக்கப்பட்டு அத்யாபனம் செய்து வந்தார்கள்.

ராஜேந்திர சோழதேவர் தான் திக்விஜயம் செய்யவேண்டும் பொருட்டு வடக்கே போய் அநேகதேசங்களை பிடித்து காங்கேய வம்சத்து ராஜாவை ஜயித்து அந்தவம்சத்து ராஜ குமாரியை கல்யாணம் செய்துகொண்டு, கங்கைகொண்ட சோழன் என்று பேருங்கொண்டு, இந்த விஷயம் சாச்வதமாய் ஞாபக மிருக்கும்படி ஒரு பெரியமண்டபங்கட்டி அதற்கு கங்கைகொண்ட சோழமண்டபம் என்று பெயர் அளித்தான். இந்த மண்டபத்தைப்பாடசாலைப் பிள்ளைகளுக்கு போஜனத்திற்கு அன்னசாலையாக உபயோகப்படுத்தும்படி விட்டுவிட்டார்.

பிள்ளைகள் ஸாப்பிடுவதற்கும், உபாத்தியாயர் சம்பளத்திற்கும் இன்னும் மேல் செலவுக்கும், மேற்சொல்லிய கோவில் செலவுக்காக ஒருநாளைக்கு ராஜராஜன் மரக்காலால் 30 - கலம் வீதம் 10506 - கல நெல்லும், 61½ - கழஞ்சு தங்கமும் செலவு ஆவதினால் இதற்குத் தகுந்தபடி வரும்படி வரக்கூடிய 45 - வேலி நிலத்தை மாம்பாக்கச்சேரி அல்லது பவித்ரமாணிக்கநல்லூர் என்னும் கிராமத்தில், மான்யமாக விட்டுவிட்டார். இந்த தர்மத்தை ஸரிவர பரிபாலித்து வருவதற்காக அந்த எண்ணாயிரம் அந்தணரில் ராஜராஜ சதுர் வேதிமங்கலம் என்னும் சொல்லப்பட்ட கிராமத்திய மஹாஜனங்களில் ஒருஸபை ஏற்பாடு செய்து பார்த்துவரும்படிக்கும் அவ்வூர் வியாபாரிகளை கூலிதவிடு இல்லாமல் போஜனசாலைக்கு அரிசியையும் சிலரை விறகுக்குவேண்டிய கட்டையையும் சப்ளை செய்யும்படி ஏற்படுத்தியிருந்தார்.

ஸ்ரீமாந் ரஜேந்திர சோழதேவரால் ஏற்படுத்தப்பட்டு நடந்துவந்த தர்மத்தை உத்தேசித்தால் கோவில்களில் பூஜை முதலியது நடந்துவந்தது மல்லாமல் வேதம் வேதாந்தங்களும் அப்யஸிக்கும் பொருட்டு ராஜாக்களுடைய ஸஹாயத்தின்பேரில் பாடசாலையும் ஏற்படுத்தப்பட்டு நடந்துவந்தது என்று தெரியவருகிறது.

இந்த தர்மம் ஏற்படுத்தப்பட்ட காலத்தைக் குறிப்பிடக்கூடிய எழுத்துக்கள் சிலையில் அழிந்துவிட்டன. ஸ்ரீமான் ராஜேந்தர சோழதேவருடைய காலத்தை உத்தேசித்தால் இது ஸுமார் கி. பி. 1023 - விட்டத்தட்ட ஏற்பட்டதாக இருக்கும்.

ஜீவன்ஒருவனுக்குத்தான்மாயையினால் தடங்கல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரஜால வித்யையைச் செய்கிறவர்கள் முதலியவர்களிடத்திலும் சில மந்திரங்களினாலும், ஔஷதம் முதலியவைகளினாலும், பொய்யான வஸ்துவைப்பற்றிய உண்மையான புத்தியுண்டாகிறபடியால் 'மாயாவீ' என்று பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் 'மாயை' என்பதற்குப் பொய் என்று பொருள் இல்லையாதலால் மாயாப்ரக்ருதி மித்யையல்ல. வாஸ்தவமானது.

காலம் நித்யம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சுத்தஸத்வம் என்றால் அப்ராக்ருதலோகம். அதைத்தான் 'த்ரிபாத்விபூதி' யென்றும், 'நித்யவிபூதி' யென்றும், 'ஸ்ரீவைகுண்டம்' என்றும், சொல்லுவது.

'கீழ்ச்சொன்ன ப்ரக்ருதி' காலம், சுத்தஸத்வம் மூன்றையும் 'அசித்' என்றும் 'அசேதனம்' என்றும் சொல்வார்கள்.

இம்மூன்றுவகையான சேதனர்களுடையவும், மூன்றுவகையான அசேதனங்களுடையவும் ஸ்வரூபம், ஸ்திதி (இருப்பு), ப்ரவ்ருத்தி இவைகள் ப்ரும்மத்திற்கு அதீநமானவை. இதை ஸ்ரீபாஷ்யகாரர் 'ஸ்வாபிந த்ரிவிதசேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திபேதம்' என்று அருளிச்செய்தார்.

மூர்த்த (உருவுள்ள) த்ரவ்யம் விசேஷணமாகும் ப்ரகாரம்.

இந்தச் சேதனன் அசேதனம் இவை இரண்டும் ப்ரும்மத்திற்கு விசேஷணங்கள் என்று கூறப்பட்டது. இவ்விடத்தில் ஒரு ஆக்ஷேபம் வரலாம். அதாவது அமூர்த்தமான (உருவமில்லாத) குணங்கள் (abstract qualities) ஒருவஸ்துவுக்கு விசேஷணங்களாயிருக்கக் காண்கிறோம்; மூர்த்த திரவ்யங்கள் (உருவுள்ளவை, concrete objects) விசேஷணங்கள் என்று சொல்லுவது எவ்வாறு? என்று. இதற்கு ஸமாதானம்:—இங்கு விசேஷணம் என்றால் விசேஷ்யத்தை விட்டுப் பிரிக்கமுடியாத பொருள். அது த்ரவ்யமாயு (வஸ்துவாயு) மிருக்கலாம், குணமாயு மிருக்கலாம். பசுவினிடத்திலிருந்து கோத்வம் (பசுவான உருவம்) வெளுப்பு முதலிய பதார்த்தங்களை எவ்விதம் மனதால் மட்டும் பிரிக்கலாமேயன்றி, (qualities which can be abstracted only by the mind) வேறு ப்ரகாரத்தில் பிரிக்கமுடியாதோ அவ்விதமே அந்தச்சேதனன் அசேதனன் இவை இரண்டையும் ப்ரும்மத்தை விட்டுப் பிரிக்கமுடியாது. ஆகையால்தான் இவைகள் ப்ருஹ்மத்துக்கு 'அப்ருதக்ஸித்தவிசேஷண'ங்க (பிரிக்கமுடியாத விசேஷணங்க)ளாக விருப்பது. ப்ருஹ்மத்திற்கு

ஞானம் பலம் ஐச்வர்யம் முதலிய கல்யாண குணங்களானவை எவ்விதம் 'ஸ்வரூபநிரூபக விஶேஷணங்களோ' அவ்விதமே சேதனன் அசேதனம் இவை இரண்டும் அதற்குப் பிரிக்கமுடியாத குணங்கள் இவ்வாறுள்ள விசேஷணங்களோடு கூடியதால் ப்ருஹ்மம் விசிஷ்டமேயல்லது நிர்விசேஷமல்ல; அநேக கல்யாணகுணங்களோடுகூடியது.

நிர்க்குண ச்ருதிகளின் தாத்பர்யம்.

இவ்விடத்தில் ஒரு ஆக்ஷேபம் வரலாம்—'அநேக ஶ்ருதிவாக்யங்கள் 'நிஷ்கலம் நிஷ்க்ரியம் நிரஞ்ஜநம், நிர்குணம், கேவலோ நிர்குணஶ்ச' என்றிவை முதலியவைகள் ப்ரும்மம் நிர்குணமென்று ப்ரதிபாதிக்கின்றனவே. அப்படியிருக்க ப்ரும்மம் ஸகுணமென்றும் விசேஷண விசிஷ்டமென்றும் எவ்வாறு சொல்லலாம்?'—என்று. இதற்கு ஸமாதானம்:— 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்றிவை முதலிய ஜ்ஞானமாத்ர ஸ்வரூபத்தைச்சொல்லும் ச்ருதிகளும் ப்ரும்ஹம் ஜ்ஞானஸ்வரூபம் அதாவது 'ஜ்ஞாநேநைகநிரூபணீயம்' (ஜ்ஞானம் என்பதினலே நிரூபிக்கத்தக்கது) என்றே சொல்லுகின்றன. இத்தாலே நிர்விசேஷ ஜ்ஞானமாத்ரம் தத்வம் என்று சொல்லவொண்ணுது. ஏனென்ருல் அறிகிறவனுக்கு அறிவுஸ்வரூபம். ஜ்ஞானஸ்வரூபமான ப்ரும்ஹம், ஜ்ஞானத்திற்கு ஆச்ரயமாயிருக்கிறது என்று சொல்வது மிகவும் உசிதம். தேஜோத்ரவ்யங்களான ஸூர்யன் முதலியவைகள் ப்ரபை முதலியவைகளுக்கு ஆச்ரயமாயிருப்பதுபோல் ப்ரும்மம் ஜ்ஞானம் முதலியவைகளுக்கு ஆச்ரயமாயிருக்கிறது ப்ருஹ்மத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் முதலிய அநேக குணங்களுண்டு, என்பதை சுருதிகள் பலவாறு உத்கோஷிக்கின்றன. 'யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்' (எவன் யாவற்றையும் அறிகிறவனே), 'ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ' (அறிகிறவனும் ஆளுகிறவனுமான ஒருவனும் அறியாதவனும் ஆளப்படுகிறவனுமான மற்றொருவனும்), 'பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச' (இந்த ப்ரும்மத்திற்கு அநேக மேலான விசித்ரசக்தி ஜ்ஞானம் பலம் முதலிய குணங்கள் ஸ்வபாவமாயுள்ளது) 'அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:' (பாபம், கிழட்டுத்தனம், மரணம், துக்கம், பசி தாஹம் முதலிய (கெட்ட) குணங்கள் இல்லாததும், ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய நல்லகுணங்களையுடையதுமானது, ப்ரும்மம்) என்கிற சுருதிவாக்யமானது

நிர்க்குண சுருதிகளுக்குக் கெட்டகுணங்கள் ஒன்றும் இல்லையென்பது தான் தாத்பர்யமென்றும், ப்ரும்மம் அநந்த கல்யாணகுணகணமுடையதென்றும் சொல்வதற்காக, முதல் ஆறு விசேஷணங்களால் கெட்டகுணங்கள் யாவற்றையும் நிஷேதித்துக் கடைசி இரண்டு விசேஷணங்களால் ஸமஸ்தகல்யாணகுணகணங்களை இருப்பவையாக விதிக்கின்றது. ஆகையால் ப்ரும்மம் நிர்விசேஷமல்ல. அநந்தகல்யாணகுணங்களோடும், சேதனசேதனங்களோடும் கூடியது. இவ்விதம் சேதனசேதன விசிஷ்டமான பரும்மம் ஒன்றுதான் தத்வம்—என்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம். இதுவே விசிஷ்டாத்வைத சப்தத்தின் பொருள்—விஶிஷ்டஸ்ய அத்வைதம் - விஶிஷ்டாத்வைதம்.

ப்ரும்மத்துக்கும் விசேஷணங்களுக்கும் ஆத்மசரீரபாவஸம்பந்தம்.

இதற்குமேல் ஒரு ஆக்ஷேபம் வரலாம். அதாவது:—முற்கூறிய பிரகாரம் சேதனம், அசேதனம், ப்ரும்மம் இவைகள் வெவ்வேறு தனித்தனியான பதார்த்தங்களானதால்; தத்வங்கள் மூன்ருயிருக்க, ஒரேதத்வம்தான் உண்டு என்று எவ்வாறு சொல்லக்கூடும் என்று. இந்த ஆக்ஷேபத்திற்குச் சரீர சரீரி பாவத்தால் விசிஷ்ட ஐக்யவிவக்ஷையினல் ஸமாதானம் செய்யவேண்டியது. எப்படியென்ருல்:—'நான் அறிகிறேன்' என்று சொல்லும்போது அறிவது என்பது ஆத்மாவின் கார்யமாதலால் 'நான்' என்று சொல்லும்போது 'நான்' என்னும் பதத்தினுல் சேதனனைத் தனித்துச்சொல்லுகிறோம். பெருத்திப்பது என்பது சரீரத்தின் தர்மமாதலால் 'நான்' என்னும் பதத்தினுல் சரீரத்தைத்தனித்துச் சொல்லுகிறோம். "நான் பேசுகிறேன்" என்று சொல்லும்போது 'பேசுகிறது' என்பது தனித்த ஆத்மாவின் தர்மமுமல்ல; தனித்த சரீரத்தின் தர்மமுமல்ல தனிமையான ஆத்மா பேசாது. தனித்த சரீரமும் பேசாது. ஆகையால் "பேசுகிறேன்" என்பது சரீரத்தோடுகூடிய ஆத்மாவின் கார்யமாதலால், 'நான்' என்னும் பதத்தினுல் இவ்விடத்தில் சரீர விசிஷ்டமான ஆத்மாவைச் சொல்லுகிறோம். அதுபோலவே சுருதியானது ஒன்றுக்கொன்று அத்யந்தம் பின்னங்களாயிருக்கும் சேதனன், அசேதனன், ப்ரும்மம் இம்மூன்றுவஸ்துக்களையும், சில இடங்களில் தனித்தனியாகவும் சில இடங்களில் சேர்த்தும் சொல்லுகின்றது. மீமாம்ஸையில் "யதாக்நேயோऽஷ்டாகபாலோऽமாவாஸ்யாயாம் பௌர்ணமாஸ்யாம் சாச்யுதோ பவதி' (அக்நிதேவதையை உத்தேசித்து அமாவாஸ்யா பௌர்ணமாஸைகளில் எட்டு கபாலங்களில் செய்த புரோடாசத்தை த்யாகம் செய்யவேண்டியது) என்கிற உத்பத்தி வாக்யத்தால் ஆக்நேயயாகத்தையும், 'தாப்யாமேதமக்நீஷோமீயமேகாதஶகபாலம் பௌர்ணமாஸே ப்ராயச்சத்' என்கிற மற்ருெ

ரு உத்பத்தி வாக்யத்தால் அக்நீஷோமீயம் என்கிற யாகத்தையும் அவ்வாறே 'உபாம்சு யாஜமந்தரா யஜதி' (உபாம்சு யாகத்தை நடுவில் செய்யவேண்டியது) என்று மற்றொரு உற்பத்தி வாக்யத்தால் உபாம்சுயாகத்தையும், ஆக இம்மூன்று யாகங்களையும் தனித்தனியே விதித்துப் பிறகு ஷை மூன்று யாகங்களையும் சேர்த்துச்சொல்லுகிற ஸமுதாயாநுவாதி வாக்யமாகிற 'ய ஏவம் வித்வாந் பௌர்ணமாஸீம் யஜதே' (இவ்விதம் அறிந்த எவன் பௌர்ணமாஸீ யாகத்தைச்செய்கிறானே) என்கிற விதி வாக்கியத்தால் மூன்று யாகங்களையும் சேர்த்து 'பௌர்ணமாஸீ' என்னும் பதத்தாலும், அவ்வாறே முதலில் தனித்தனியாகவிதித்துப் பிறகு 'அமாவாஸ்யா' என்னும் பதத்தால் ஆக்நேயம், ஐந்த்ரம், ஸாந்நாய்யம் இம்மூன்று யாகங்களையும் சேர்த்துச் சொல்லி, ஷை ஸமுதாயத்வயமாகிற ஆறுயாகங்களை 'தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்க்காமோ யஜேத' (ஸ்வர்க்கத்தை விரும்புகிறவன் தர்சபூர்ணமாஸ யாகம் செய்யக்கடவன்) என்கிற அதிகார வாக்யத்தால் சொல்லுகிறது. அதுபோல் பெயரும் ரூபமும் வெவ்வேறாக உள்ள சித், அசித், ஈச்வரன் இவைகளை 'க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:' (விகாரமுள்ள ப்ரக்ருதியையும் விகாரமில்லாத ஜீவனையும் ஆள்கின்ற ஈசுவரன்) 'பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்' (ஜகத்திற்கு சேஷியாயும், ஆத்மாவுக்கு நியந்தாவுமான ஈசுவரன்) என்றிவை முதலிய வாக்யங்களால் எல்லா அவஸ்தைகளிலும் பரமாத்மாவான ப்ரும்மம் சரீரி என்றும், மற்ற இரண்டும் அவனுக்குச் சரீரமென்றும் சொல்லி, சரீரியாகிற பரமாத்மா காரணாவஸ்தையிலும் கார்யாவஸ்தையிலும் ஒரே தத்வம் என்று 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்', (ஸத் ஒன்று தான் முதலில் இருந்தது) 'ஆத்மா வா இதமக்ர ஆஸீத்' 'ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீத்' (ஆத்மா என்றும் ப்ருமம்மம் என்றும் சொல்லப்பட்டது தான் முதலில் இருந்தது,) என்றிவை முதலிய வாக்யங்களால் சேதனாசேதனங்களைச் சரீரமாயுடைய பரமாத்மா விசிஷ்ட வேஷத்தாலே ஒன்று என்று சுருதி உத்கோஷிக்கிறது. ஆகையால் இச்சரீராத்மபாவ ஸம்பந்தத்தை யிட்டுச் சில இடங்களில் தத்வம் ஒன்றாகவும் மற்ற இடங்களில் தத்வம் அநேகமாகவும் அர்த்தத்தை யநுஸரித்து அந்தந்த அபிப்ராயத்துக்குத் தக்கவாறு சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சரீராத்ம பாவஸம்பந்தம் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு 'வ்யாவர்த்தகம்' (differentia.) அதாவது மற்றுமுள்ள ஸித்தாந்திகளொருவரும் இசையாதே நம்முடைய ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான

அர்த்தம். நம்முடைய ஸித்தாந்தம் ஒன்றில் தான் ஸகல ச்ருதிவாக்யங்களும் துல்ய பலமானவை. நிர்விசேஷாத்வைதிகளுக்கு ஜீவனுக்கும் பிருமத்திற்கும் ஐக்யம் சொல்லுகிறாப்போல் தோன்றும் அபேதச்ருதிகளும், ஆத்மாவுக்கு யாதொருகுணமும் இல்லையென்று சொல்லுகிறாப்போல் தோன்றும் நிர்க்குண ச்ருதிகளும் முக்கியமானவை. பேதசுருதிகளும் ஸகுணசுருதிகளும் முக்கியமல்லாதவை. அவை வ்யவஹாரதசையில் கற்பிக்கப்பட்ட பேதங்களையும் குணங்களையும் சொல்லுகின்றன. த்வைதவாதிகளுக்கு அபேதச்ருதிகள் முக்கியமல்ல. பேதச்ருதிகள் மட்டுமே ப்ரபலங்கள். அபேதசுருதிகள் துர்ப்பலங்கள். விசிஷ்டாத்வைதிகளான நமக்கோவென்றால், சேதனாசேதனங்களுக்கும் ஈசுவரனுக்குமுண்டான சரீராத்மபாவஸம்பந்தத்தைச் சொல்லுகின்ற கடகச்ருதிகளின் பலத்தால் எல்லாச்ருதிகளும் துல்யபலங்கள். ஸமஸ்தகல்யாணகுணங்களையும் போதிப்பதால் ஸகுணசுருதிகளும், கெட்டகுணங்கள் ஒன்றுமில்லையென்று சொல்வதால் நிர்க்குண சுருதிகளும், அத்யந்த பின்னங்களான இம்மூன்று தத்வங்களின் ஸ்வரூபத்தைத் தனித்தனியாகப் பிரித்துச்சொல்வதால் பேதசுருதிகளும், சரீரவிசிஷ்டமான பரமாத்மாவை ஒன்று என்று விவக்ஷிப்பதால் அபேதசுருதிகளும், ஸ்வரஸங்களாய் ஸர்வசுருதி ஸாமரஸ்யம் உண்டாகையால் விசிஷ்டவேஷத்தால் தத்வம் ஒன்று என்று சொல்லக்குறையில்லை.

ப்ரும்மத்துக்குச் சரீரம் என்பதற்கு ஆக்ஷேபங்கள்.

இதற்குமேல் ஒருபலமான ஆக்ஷேபம் கிளம்புகிறது. 'விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்திற்கு ப்ரதாந ப்ரதிதந்த்ரமான இந்தச் சரீராத்மபாவ ஸம்பந்தம் மிகவும் அஸங்கதம். ச்ருதி ப்ரமாணத்திற்கும் அநுபவயுக்தி வாதத்திற்கு விரோதமாயிருக்கிறது. ஏனெனில் பரமாத்மாவைக்குறித்து 'அபஹதபாப்மா' (பாபம் மூப்பு, பசி தாஹம் முதலியது இல்லாதது), 'அநச்நந்நந்யோ அபிசாகசீதி' (சாப்பிடாமல் = கர்மபலத்தை அநுபவிக்காமல், விளங்குகிறான்) 'அபாணிபாதோ ஜவநோ க்ரஹீதா பச்யத்யசக்ஷு: ஸ ச்ருணோத்யகர்ண:' (கைகால்கள் இல்லாமல் வஸ்துக்களை எடுக்கவும், ஓடவும், கண்களில்லாமல் பார்க்கவும், காதில்லாமல் கேட்கவும் சக்தியுள்ளது), 'அப்ராணோ ஹ்யமநா:' (பிராணனும் மனது மில்லாதவன்) என்று பரமாத்மாவுக்கு சரீரம், இந்திரியம், மனது பிராணன் ஒன்றுமில்லையென்றும், 'ந ஹ வை ஸசரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோ ரபஹதிரஸ்தி' (சரீரமிருக்குமளவில் ஸுகதுக்கங்கள் விடுவதில்லை) என்றும், சுருதிகள்

சொல்லுவதாலும், சரீரத்தில் தாதுககள் ஸமமாயிருந்தால் ஸுகமும், விஷமமாயிருந்தால் துக்கமும் உண்டாவது நம் அனுபவ ஸித்தமாதலாலும், ஸர்வேச்வரனுக்குக் கர்மங்களும் கர்ம பலபோகங்களும் இல்லாததாலும், அவன் இந்த்ரிய மூலமாய்ப் போகத்தை அனுபவிக்கிறதில்லை யாதலாலும், அவனுக்கு நம்மைப்போல் ப்ராணன்கள் இல்லை யாதலாலும், அவனுக்குச் சரீரம் இருக்க முடியாது. சேதனனும் அசேதனமும் அவனுக்குச் சரீரமாயிருக்கமாட்டா. சரீரத்திற்கு இந்திரியம் அவசியமாய் வேண்டியிருப்பதால் இந்திரியாச்ரய மல்லாத ஸம்ஹத வ்ருஷி ரூபமான (அசேதனங்களின் சேர்க்கையினு லுண்டான) த்ருணம் காஷ்டம் முதலியவைகளும், ஸமஷ்டி ரூபமான பூதஸூக்ஷ்மமும்சரீரமாகா. ஜ்ஞானமொன்றே ஆகாரமான சேதனனுக்கும் இவை ஒன்றுமில் லாததால் அவனும் சரீரமாகமாட்டான்.

'சரீரம் என்றால் என்ன? 'ஹொமாயதநம்' (போகஸ்தாநம்) சரீரம், என்று சொல்லமுடியாது. போகஸ்தானங்களாகிற வீடு வயல் முதலியவைகள் சரீரங்களென்று வ்யவஹரிக்கப்படுவதில்லை. ஸ்வதஸ்ஸித்தமான நித்யநிரதிசயாநந்தத்தையுடைய ஈச்வரனுக்குத் தன்போகத்தைக்குறித்துச் சேதனர்களும் அசேதனர்களும் ஸ்தானங்கள் என்று சொல்ல முடியாது. பாரவேண்டாம்ஆனால் 'எவனுடைய இச்சைக்கு அதீநமான ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி இவைகளையுடையது எதுவோ அது அவனுக்குச் சரீரம்' என்று சரீரலக்ஷணம் சொல்லில் எல்லா வஸ்துக்களும் ஈச்வரனுடைய இச்சைக்கு அதீனமானமான ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுடையவையாகையால் அவனுக்கு எல்லாம் சரீரம் என்று சொல்லவும் முடியாது. ஏனெனில் நம்முடைய சரீரத்தின் ஸ்வரூபமானது நம்முடைய இச்சையால் உண்டாகிறதில்லை. அவ்விதம் லக்ஷணம் (definition) சொன்னால் நம்முடைய சரீரம், சரீரமாகாமற் போய்விடும். ஒரு வியாதிக்காரனுடைய சரீரம் அவனுடைய இச்சையினால் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. அவன் சரீரமும் சரீரமாகாமற் போய்விடும். இறந்துபோனவனுடைய சரீரத்திற்கும் அந்த ஆத்மாவின் இச்சையினால் ஸ்திதி ஏற்படுகிறதில்லை. அதுவும் சரீரமாகாமல் போய்விடும். மேலும் நாம் நம்முடைய இச்சையினால் ஒரு பொம்மையைச் செய்கிறோம். அதைக்காப்பாற்றிவைத்து அதை ஆட்டிவைக்கிறோம். நம் இஷ்டம்போல் அதை அழித்துவிடுகிறோம். ஆகையால் அந்த பொம்மையின் ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவைகள் நம்முடைய இச்சைக்கு அதீநமானதால் அது நமக்குச் சரீரமாய்விடும். பொம்மை நம்முடைய சரீரமென்றால் பரிஹஸிக்கத்தக்கது. ஆகையால் சரீரத்திற்கு லக்ஷணம் மேற்கூறிய பகாரம்

சொல்லக்கூடாது. பின்னையெப்படிச் சொல்லவேண்டுமென்றால்:—'கர்மபல போகமான ஸுகதுக்கத்துக்கு ஸாதநமாயும், இந்திரியாச்ரயமாயும், பூதஸங்காத (சேர்க்கை) (combination of elements) ரூபமாயும், பஞ்சப்ராணாதீநதாரணமாயும் (sustained by the five breaths) இருப்பது சரீரம், என்றே லக்ஷணம் சொல்லவேண்டியது. இவ்விதமான சரீரம் ஈச்வரனுக்கு இல்லை. ஆகையால் ஈச்வரனுக்குச் சரீரம் உண்டென்றும், சேதனாசேதனங்கள் அவனுக்குச் சரீரம் என்றும் சொல்லுகிற ஸித்தாந்தம் அஸங்கதம்—என்று இதற்கு

ஸமாதானம்.

இந்த ஆக்ஷேபம் ஸரியல்ல. ஏனென்றால்:—எல்லா வேதாந்தவாக்கியங்களும் எவ்வித அவஸ்தையிலும் சேதனமும் அசேதனமும் பரமாத்மாவுக்குச் சரீரமென்பதைத் தெரிவிக்கின்றன. ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் 'யః ப்ருதிவ்யாம் திஷ்டந்.................................யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்.' (எந்த பரமாத்மா பூமியில் இருந்துகொண்டு அதை அடக்கி ஆள்கின்றானோ, எவனுக்குப்பூமி சரீரமோ) என்று ஆரம்பித்து ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், ஸூர்யன், சந்திரன் நக்ஷத்திரம், பிராணன், வாக்கு முதலிய இந்திரியங்கள், மநஸ், முதலிய ஸமஸ்தமான அசித் வஸ்துக்களையும் அவனுக்குச் சரீரம் என்று சொல்லி 'ய ஆத்மநி திஷ்டந்.......... யஸ்யாத்மா ஶரீரம்' (எவன் ஜீவாத்மாவிலிருந்து கொண்டு அதை அடக்கி ஆள்கிறானோ, எவனுக்கு ஜீவாத்மா சரீரமோ) என்று சேதனனையும், அசேதனத்தையும் பரமாத்மாவுக்குச் சரீரமாகத் தனித்தனியாகச் சொல்லியிருக்கிறது. அவ்வாறே ஸுபாலோபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமாயணத்திலும் 'ஜகத்ஸர்வம் ஶரீரம் தே' (ஜகத்து முழுவதும் உமக்குச் சரீரம்) என்று சகரவர்த்தித் திருமகனைப் பார்த்து ப்ரும்மாசொல்லுகிறார். ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் 'யதம்பு வைஷ்ணவః காயః ததஸ்ஸர்வம் வைஷ்ணவ ஸநாः' (ஜலம் முதலிய எல்லாம் ஹரியின் சரீரம்), 'தாநி ஸர்வாணி தத்வபுः' (அவைகள் எல்லாம் அவன் சரீரம்) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மனுஸ்ம்ருதியிலும் 'ஸோऽபித்யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதாः ப்ரஜாः' (அவர் ஸங்கல்பித்து பூத ஸூக்ஷ்மமான தன் சரீரத்திலிருந்து பிரஜைகள் யாவற்றையும் ஸ்ருஷ்டிப்பதற்காக) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மனுஸ்ம்ருதி சுலோகவ்யாக்கியானவஸரத்தில் குல்லூகபட்டரும்' ப்ருஹதாரண்யக ஶ்ருதௌ ஆத்மா

ജമങ്കാനേ ഇതി ത്രിദണ്ഡിവൈഷ്ണവ സിദ്ധാന്ത സമ്മാനിതഃ പ്രതിഭാതി ' (ஸ்ம்ருதிகர்த்தாவான மனுமஹர்ஷிக்கும் த்ரிதண்ட ஸந்யாஸமதமாகிற ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்திலேயே திருவுள்ளம்போல் காண்கிறது) என்று வெளியில் சொல்லிக்கொள்ள மனமில்லாமல் சொல்லுகிறார். மஹாபாரதத்திலும் ஸஹஸ்ரநாமாத்யாயத்தில் ' ത്രൈലോക്യ ശരീരം വിഷ്ണുമീശം നമാമി ' (மூன்று லோகங்களையும் சரீரமாயுடைய விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பரமாத்மாவுக்குச் சேதனாசேதனங்கள் சரீரமென்பது ஸர்வசாஸ்திரங்களுக்கும் ஸம்மதமாயிருக்கிறது.

பிறகு சரீரலக்ஷணவிசாரம் செய்யப்புகுந்தால், லோகத்தில் 'ஶரீரம்' என்று எந்த வஸ்துக்களைச் சொல்லுகிறோமோ அவைகள் ஒரே ஆகாரமுள்ளதாகக் காணப்படுகிறதில்லை. '஘டம்' என்பது ஒருவிதமான அவயவ அமைப்புள்ள த்ரவ்யத்தை அதாவது ஸங்காரஸம்ஸ்தாநரூபத்தையே நியமேன (எப்போதும்) குறிக்கின்றது. ஆகாரம் வேறுபட்டால் அந்த வஸ்துக்களைச் சட்டி, வாணாய் முதலிய பதங்களால் சொல்லுகின்றோம். சரீரசப்தம் அப்படியல்ல. ஈ, எறும்பு, கொசு, புழு, பக்ஷி, ஸர்ப்பம், பசு, விருக்ஷம், மனிதன் முதலிய ஒன்றுக்கொன்று மிகவும் வித்யாஸமுள்ள, விலக்ஷணங்களான வஸ்துக்கள் யாவற்றையும் சரீரசப்தம் குறிக்கின்றது. ஆகையால் நாம் சொல்லும் லக்ஷணம் மேற்குறித்த எல்லாவஸ்துக்களுக்கும் பொருந்தியதாக இருக்கவேண்டும். கர்மபலபோக ஸுகதுக்க ஸாதனமாயும், இந்திரியாச்ரயமாயும், பூதங்களின் சேர்க்கையாயும், பஞ்சவ்ருத்தி ப்ராணாதீநதாரணமுமிருப்பது சரீரமென்று சொல்லவொண்ணாது. ஏனெனில்:—முற்கூறியபடி ஈச்வரனுக்குச் சரீரமாகச்சொல்லப்பட்ட ப்ருத்வீ, ஜலம் ஜீவாத்மா முதலியவைகளிற் பொருந்துவதில்லை. (அவ்யாப்தி தோஷம்வருகிறது) அவ்விதமே ஈசுவரனும் முக்தர்களும் தங்களிஷ்டப்படி ஸ்வீகரிக்கும் சரீரங்களிலும் லக்ஷணம் பொருந்துவதில்லை. ஏனென்றால் அந்தச் சரீரங்கள் கர்மபலபோகத்திற்காக ஏற்பட்டன. பரமாத்மாவினுடைய இச்சாவிக்ரஹங்களும் அர்ச்சாவிக்ரஹங்களும் ' നഹി ഭൂതസംഘസംസ്ഥാനോ ദേഹോ ഹ്യസ്യ പരമാത്മനഃ ' (பரமாத்மாவின் சரீரம் பூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்டதல்ல) என்று சொல்லப்பட்டிருப்பதால் அவ்விடத்திலும் லக்ஷணம் பொருந்தாது. ஆகையால் பூதஸம்காதரூபம் என்கிற லக்ஷணாம்சம் ஸரியல்ல. 'பஞ்சவ்ருத்தி ப்ராணாயத்ததாரணம்' (ஐந்துவிதமான வ்ருத்திகளையுடைய ப்ராணனால் தரிக்கப்படுதல்) என்கிற அம்சமும் ஸ்தா[illegible] பொருந்துவதில்லை. ஏனெனில் ஸ்தாவரங்களி

ஸ்ரீஸத்ஸம்ப்ரதாய ப்ரகாசநீ.

இந்த க்ரந்தம் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத ஸ்வதேசிக யதீந்த்ர மஹாதேசிகனால் நாற்பது வர்ஷங்களுக்குமுன் அருளிச்செய்யப்பட்டு, அந்தத்திருவடி ஸம்பந்தம்பெற்றவராய், 30-நெ. கச்சாலீச்வரர் அக்ரஹாரம், சென்னையில் வஸிக்கும் காரகுருச்சி வங்கீபுரம் ஸௌந்தரராஜாசார்ய ஸ்வாமியால் B. A. L. T. சந்நிதி சிஷ்யர்களுடைய உபயோகத்துக்காக, தன் ஸொந்த கைங்கர்யமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா இரண்டரை.

கம்பராமாயண விமர்சம்.

வால்மீகி மஹர்ஷியால் செய்யப்பட்ட ஸ்ரீமத்ராமாயணத்தை அநுஸரித்தும், இன்னும் இதில் சொல்லப்படாத ஸங்கதிகளை ஸ்ரீநம்மாழ்வாருடைய அனுக்ரஹ விசேஷத்தால் வெகு அழகாக கம்பர் என்ற மஹாவித்வான் கம்பராமாயணம் என்ற க்ரந்தத்தைத் தமிழில் செய்திருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஒரே விஷயத்தை இந்த இரண்டு கவிகளும் எடுத்துரைக்கும் ஸ்வாரஸ்யம் ஸமஸ்கிருதத்திலும் தமிழிலும் பயிர்ச்சியுள்ளவர்களுக்குத்தான் நன்கு விளங்கும். ஸாதாரணமாய் ஸமஸ்க்ருதத்தில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு தமிழ் பாஷையில் த்வேஷமும், கௌரவாபாவமுமிருப்பது ஸஹஜமாயிருக்கிறது. இவர்களுக்கு இந்த அமிருதமான கம்பராமாயணத்தின் ஸ்வாரஸ்யத்தை அறிவிக்கும் பொருட்டு, கம்பராமாயண விமர்சம் என்ற க்ரந்தம், ஸமஸ்கிருதத்தில் ஸஹ்ருதயா என்னும் பத்திரிகையில் அதின் ஸம்பாதகரான வித்யாநிதி ஸ்ரீ. உ.வே. ர. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமியால் எழுதப்பட்டு வருகிறது. இதில் இரண்டு க்ரந்தங்களின் ஸ்வாரஸ்யமும், எந்த எந்த அம்சம் எதில் புதிது என்றும் அதின் விசேஷத்தையும் நன்றாக எடுத்துக்காட்டி வருகிறார். இது ஸமஸ்கிருத பாஷாபிமானிகள் கவனிக்கத்தக்கது. இந்த ஸஹ்ருதயா என்னும் பத்திரிகை இந்த 1923௵ ஜனவரி௴ முதல் மதுரையிலிருந்து வெளியிடப்பட்டு வருகிறது.

All remittancess should be sent directly to the Secretary, Sri Vaishnava Siddhanta Sabha and not to any other.

Ready for Sale

வேதாந்ததீபிகை ஆபீஸில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

1. வேதாந்த தீபிகை பழய ஸஞ்சிகைகள் வாஸியும் 11 - 12 ஸஞ்சிகைகளுக்கு	3	0	0
பைண்டு வாஸியும்.	3	8	0
2. ஸ்ரீ ஸித்தார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ. உ.ப. இஞ்ஜிமேட்டு ரங்க நாதாசாரியருடைய வ்யாக்யாநத்துடன்.	0	4	0
3. ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம்.	0	4	0
4. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். ஸ்ரீ.உ.ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசாரியர் வ்யாக்யானத்துடன்	6	8	0
5. ஜககக்ஷிணி—ஸ்ரீ. உ. ப. தி. தி. ரங்காசார்யரால் செய்யப்பட்டது.	1	0	0
6. மும்மணிக்கோவை—ஸ்ரீ. உ. ப. பண்டிதபூஷணம் வித்வான் சேட்டலூர் நரஸிம்மாசார்யர் வ்யாக்யானத்துடன்	0	8	0
7. கற்புநிலை (பாதிவ்ரத்யம்) ஸ்ரீ. உ.ப. வித்யாநிதி க்ருஷ்ணமாசார்யரால் செய்யப்பட்டது.	0	2	0
8. விவாஹரஹஸ்யம்—ஸ்ரீ. உ.ப. வித்யாநிதி க்ருஷ்ணமாசாரியாரால் செய்யப்பட்டது.	0	4	0
[ஸம்ஸ்க்ருத புஸ்தகங்கள் தேவநாகர எழுத்தில்.]			
9. ந்யாயபரிசுத்தி.	3	0	0
10. கத்யத்ரயம், ஸ்ரீதேசிகன் பாஷ்யத்துடன்.	1	0	0

இவைகளை கீழ் குறிக்கப்பட்டுள்ள விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

The Secretary,
Sri Vaishnava Siddanta Sabha,
2/11, Adiappa Mudaly Street, Purasawalkam,
Vepery Post, (MADRAS. N. C.)